# கலைச் செல்வி



# மக்கள் வைத்தியசாலை

**கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.**

**ஸ்தாபிதம் 28-11-58**

மக்கள் நன்மையையும், வசதியையும். சுகாதார வாழ்க்கையையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த வைத்தியசாலை இதுவே

தினந்தோறும் திறக்கப்படும் நேரம்
காலை 7-30 தொடக்கம் மாலை 9 மணி வரை

உயர்தர சிகிச்சை பெற உதவுமிடம்
மக்கள் வைத்தியசாலையே.

WE POSSESS ALL LATEST PATENT
MEDICINES FOR SALE

SERVICE AVAILABLE DAY AND NIGHT
OUR MOTTO IS SERVICE

# PEOPLE'S DISPENSARY

## CHUNNAKAM

(MANAGING PROPRIETOR : MR. K. S. KANDIAH)

போன்: 281 தந்தி: "ஜுவெல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள்
அழகிற் சிறந்த ஆபரணங்கள்

யாவற்றிற்கும்

ஈழத்திருநாட்டில்
இணையற்ற ஸ்தாபனம்

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்

நம்பிக்கை! நாணயம்! நயம்!
உத்தரவாதம்!

பெற்ற நகைகளை 32 வருடங்களாகச் செய்தளித்து
அமோக ஆதரவுபெற்ற
இலங்கை இந்தியாவின்
மிகப்பெரிய நகை வைர வியாபாரிகள்

# எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்

# S. SINNATHURAI & BRO.,




786 கல்கி பீடி

Importers & Exporters.
Sole Agents for

## 786 Kalki Beedies

நீங்கள்
உல்லாசமாகப்
புகைப்பதற்கு

## 786 கல்கி பீடிகள்

**திறம் பீடிப் புகையிலை, பீடி இலை.**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

**39, K. K. S. ரேட் : : யாழ்ப்பாணம்.**

**கிளை:**
44, 3ம் குறுக்குத் தெரு : . கொழும்பு.

தொழிற்சாலை:
118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

ஏ.
கே.
எஸ்.
அன்
ச
ன்
ஸ்

போன்.

519

*

உங்கள்

அபிமானத்திற்கும்

அன்பிற்கும்

உரிய

நகை

வைர வியாபாரிகள்

நகை மாளிகை

63, 65, கன்னுதிட்டி

யாழ்ப்பாணம்

# FANCY PALACE

## THE HAPPY PALACE

WITH

## HAPPY GIFTS

- றேயல் தலைமுடிகள்
- றேயல் சுவர்க்கடிகாரங்கள்
- ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனுக்கள்

ஆகியவற்றிற்கு

## யாழ்ப்பாணத்தில்

**ஏக விநியோகஸ்தர்கள்**

**கண்ணைக் கவர்ந்து மனதை மயக்கும்**

பலவிதமான

## பரிசுப் பொருட்களை

**விசேட தினங்களில்**

உங்கள் உற்றூர் உறவினருக்கும், நண்பர்களுக்கும்,

பேனு நண்பர்களுக்கும்

## வாங்கிக் கொடுங்கள்

தந்தி : Fancyware          போன் : 239

# பான்ஸி பலஸ்,

27, மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

சுத்தமாக


சுகாதாரமுறைப்படி

நவீன இயந்திரங்களினால்

விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி




# மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்

## சுப்ரமணியன் சோடாக் கம்பேனி

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

## ராஜா ஸ்ரோர்ஸ்

போன்: 372

2/B, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தந்தி: ESVES

# வாசகர் வாய்மொழி

**நோய் நாடி......**

'சிறு கதைப் புதின வேந்தன் திரு. அகிலன் அவர்களுடைய பேட்டிக் கட்டுரையைச் சுவைத்து உணர்ந்தேன். அன்னார் தம் தொண்டு சிறக்க அன்னை அருளட்டும்! "பரிசுக்காகவோ பாராட்டிற்காகவோ எழுத்தாளன் எழுதுவது கூடாது. நான் எழுதுவதில்லை" என்ற அவர் தம் கூற்று மெய்யாக வேண்டும். அஞ்ஞான்றுதான் எழுத்தாளரிடையே ஊடிப் பரவும் "எழுத்தாளர் காய்ச்சல்" என்ற வேண்டாத நோய் மடியும்.

கிருஷ்ணகிரி சு. அரங்கநாதன்.
(தமிழ்நாடு)

**நாட்டு (க) ஏட்டிலே**

ஆனி இதழில் வெளியான நாட்டுப் பாடல்களின் நயம் மிகவும் நன்ருக இருக்கிறது. இது போன்ற கட்டுரைகளினுல், பழைய பாடல்களை நினைவுகூருவதற்கு நல்லதோர் வாய்ப்பாக இருக்கும். சிறந்த நாட்டுப் பாடல்களைச் சேர்த்து ஒரு நூலாகவும் வெளியிடலாமே?

புங்குடுதீவு. ந. மருதாம்பிகை:

**இசையில் வசை.**

இசைவிழா பற்றிய குறிப்பு வரவேற்கக் கூடியது. கட்டுரையாளரின் துணிச்சலைப் பாராட்டுகின்றேன்.

வேலணை. மு. வ. மாணிக்கவாசகர்.

**வாழ்க, மிஸ். வறுமை!**

வறுமையில் வாடும் பெண்களோடுதான் அழகும் கூத்தாடுவதைப்போல், வறுமையில் வளருகின்ற 'கலைச் செல்வி' யிடமுள்ள இலக்கிய அழகுக்கு இணை அதுவேதான்.

இரத்தினபுரி. மு. பொன்னம்பலம்.

**நெஞ்சு பொறுக்குதில்லையே!**

உனக்காக, கண்ணே! தொடர் கதையில் கதாநாயகன் சண்முகம் படும் பாட்டைப் பொறுக்க முடியவில்லையே!

தல்லூர். சு. பூர்ணு.

**பிடியுங்கள், பணம்.**

அறிவு வளர்ச்சிப் போட்டியில் எனக்குக் கிடைத்த இரண்டாவது பரிசுத் தொகையாகிய 10/– ரூபாவை 'கலைச்செல்வி'க்கே அளிக்கின்றேன். என் அன்புக் காணிக்கையை ஏற்றுக் கொள்ளுங்கள்.

திருநெல்வேலி. க. இராஜேஸ்வரி.

வாசகர்போட்டி (1), ஆனி இதழ் "பட் பட்" பரிசு ஆகிய இரண்டு பரிசுத் தொகைகளையும் 'கலைச் செல்வி' வளர்ச்சி நிதிக்குச்சேர்த்து, பற்றுச் சீட்டை அனுப்புக.

காரை நகர். க. சுப்பிரமணியம்.

**கனகே! என் கனவே!**

சென்ற இதழில் வெளியான கனகி புராணப் பாடல்களைப் படித்தேன்; சுவைத்தேன்; பரவசமடைந்தேன். கனவிலே கூடக் காணுத அத்தனை அழகுடையவளா கனகி? என் கண்ணைவிட்டு அகலவே மாட்டாள்.........

வண்ணர்பண்ணை. நாடகப்பிரியன்.

**கனகரும் கனகியும்.**

கனகி புராணம் பற்றிய கனக. செந்திநாதனின் கட்டுரை நன்ருகவிருக்கின்றது.

எப். எக்ஸ். சி. நடராசா.
கொழும்பு.

**நூறில் பாதி ஐம்பது.**

அச்சில் ஏருத இத்தனை அருமையான கவிதைகளையும் அச்சில் கொண்டுவந்து அரும்பணி புரிந்துள்ளீர்கள். இந்தப் பெருமையில் பாதி கட்டுரையாளருக்கு—பாதி தங்களுக்கு .........

யாழ்ப்பாணம். கனகிதாசன்.

# கலைச்செல்வி

கலை: 2 | சார்வரி–ஆடி | காட்சி: 6


## பொருளடக்கம்.


கட்டுரை

அண்ணாமலை நகரில்
இடது சாரிகள்.
ஓவியக்கலை.
நான் நினைப்பவை.
பத்திரிகை வளர்ச்சி.

கவிதை

இரங்கிடு.
என்னுடைய ஆசை
பாலர் பாடல்.

சிறுகதை

பட்டகடன்.

தொடர்கதை

உனக்காக, கண்ணே!

பிற

பட் பட் (கேள்வி-பதில்)
வளருந் தமிழ்.
அறிவு வளர்ச்சிப் போட்டி


# வணக்கம்

தமிழ் மறைக் கழகத்தினரின் அரும்பெரும் முயற்சியால் சென்ற மாதம், தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் திருவள்ளுவர் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாத்தளை மாணவர் மன்ற ஆதரவில் தமிழ் மறைக் கழகத்தினர் நடாத்திய விழாவில் இலங்கை அறிஞர்களும், இந்தியாவிலிருந்து அறிஞர் ச. சிவகுமாரன் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

எழுத்தாளராக ஆகவேண்டும் என்ற ஆசை பலரிடமுண்டு. ஓரளவு திறமையும், தன்னம்பிக்கையும் இடைவிடா முயற்சியும் இருந்தால், நிச்சயம் நல்ல எழுத்தாளராகிவிடலாம். பிரபல எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்கள் தொடர்ந்து எழுத ஒப்புக்கொண்டுள்ள "நான் நினைப்பவை" என்ற கட்டுரைத் தொடர் பலருக்கு நன்மை அளிக்கக் கூடியது.

நகைச்சுவைக் கட்டுரைப் போட்டி பற்றிய விபரங்களை இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். எழுத்தாளர்கள் எல்லாரும் இதில் உற்சாகமுடன் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

அடுத்த இதழ் மகளிர் மலர். புதுமைப்பிரியை, யாழ்நங்கை, சாந்தினி, உமா, பவானி ஆகியோர் மலருக்கு மணமூட்டுகின்றனர்.

—ஆசிரியர்.




## 2. வெளியூர்ப் படிப்பு

தன்னைத் தாழ்த்திக் கொள்வதில் தமிழனோடு யாரும் போட்டி போட முடியாது. ஏனென்றால் அதிலேதான் அவனது பெருமை தங்கியிருக்கிறதென நினைக்கிறான். நாயினுங் கடைப்பட்ட நாயேன் என்று சொல்லிச் சொல்லித் தன்னைத் தாழ்த்துவதில் பரமதிருப்தி. ''தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்" என்ற விவிலியம் அவனுக்கும் வேதம்தான். தன்னைப் பற்றிப் பிடித்த கேடு தன் ஊரைப்பற்றி, நாட்டைப்பற்றி, தன் இனத்தவரைப்பற்றி தமிழரைப்பற்றியெல்லாம் பிடித்துப்பிடித்துத் தாழ்த்தித் தாழ்த்தித் தனிச் சரித்திரத்தையே ஏற்படுத்தியிருக்கிறது.

ஊர்க் கத்தரிக்காய், ஊர்த் தேங்காய் என்று தேடித்திரிந்து வாங்குகிறவன் தமிழன். வன்னிக்காய் என்று அவனுக்கு ஒரு ஏளனம். ஆனால் ஊர்ப்படிப்பு மாத்திரம் பிடிக்காது. சொந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடத்தில் படிப்பில்லை என்ற கருத்து. பக்கத்து வீட்டு வைத்தியர் பேர் பெற்றவர். இருந்தாலும் பத்து மைலுக்கப்பால் கார் பிடித்துப்போய் வைத்தியம் செய்விக்க வேண்டும் இது ஒரு பிரேமை, பட்டணத்துப் படிப்பு, கொழும்புப் படிப்பு, இந்தியாப் படிப்பு. இங்கிலாந்துப் படிப்பு இப்படி எத்தனையோ விதமான படிப்பு.

இந்தப் பைத்தியம்தான் என்னையும் பிடித்து விட்டது. ஊர்ப் படிப்புப் பிடிக்கவில்லை சொந்தஊர் ஊரெழு. ஊரெழுப்படிப்புப் பிடிக்கவில்லை. அதனால் நான் இங்கிலாந்துக்குப் போகவில்லை. பக்கத்து ஊரான உரும்பராய்க்குப் போனேன். உரும்பராய்ப்பள்ளிக்கூடம்எவ்வளவு பெரிய பள்ளிக்கூடம். பெரிய பெரிய வாத்திமார்! சீ, இந்த ஊரெழுப் பள்ளிக்கூடம் இருக்கிறதே. அது வேதப் பள்ளிக்கூடம். நான் சைவப் பிள்ளை, அதில் படிக்கலாமா? வேதக்காற மணம் என்று, ஒரு சிணி கூடமணக்கிறதாக. ஒரு எண்ணம் எனக்கு. அவ்வளவு தடித்த சைவம் நான். வேதப் பள்ளிக்கூடம் மாத்திரமல்ல, ஒரு சைவப் பள்ளிக்கூடமும் இருந்தது ஊரெழுவில். அது கிழக்கித்தியாற்றை பள்ளிக்கூடம். நான் மேற்குத்தியான். ஊரெழு கணேச வித்தியாசாலை என்ற பெயர்ப்பலகை சும்மா தொங்கிக் கொண்டு கிடந்தது. மேற்குத்தியாருக்கும்கிழக்குத்தியாருக்கும் வெட்டுப் பகையில்லை. இருந்தாலும் உறவு நிலையில் அடிக்கடி தடிமன் பிடித்து விடும் இடைக்கிடை இருமலும் இருந்தது.

ஏன் நமக்கிந்தத் தொந்தரவு? நான் ஒரேயடியாக உரும்பராய்க்குப் போய்விட்டேன். நான் மாத்திர மல்ல, இன்னும் இரண்டொரு பள்ளித் தோழர்களேயும் கூட்டிக் கொண்டு போய்விட்டேன். பாவம்! தலைமை வாத்தியார்; சராசரி விழுந்து விட்டதே என்ற கவலே அவருக்கு.

உரும்பராய்ப் பயணம் ஒழுங்காய் நடந்தது. காலையில் புறப்பாடு வீட்டில் ஒரே ஆரவாரம். வெளியூர்ப் படிப்பல்லவா? அதற்குத்தக்க சட்டை, சாப்பாடு எல்லாம் தனி. பிறகு ஊர்வலம், மத்தியானம் மலேயாளம் கடையிலே தாளித்துக் கொட்டின சுண்டல், சுண்டலுக்குள்ளேயிருக்கும் பொரித்த மிளகாய். படிப்பு இப்படி நடந்தது. இத்தனைக்கும் படித்த வகுப்பு நாலு தான். தினமும் மூன்று மைல் நடை, நல்ல வெயில். வயதும் ஒன்பது.

எங்களேப்பிரிந்த கவலே ஆசிரியர்களே விடவில்லே. அரும் பெறல் மாணவமணிகளேயிழந்து விட்டோமே என்று எண்ணினுர்களோ. ஆசிரியர் ஒருவர் தினமும் சைக்கிளில் எங்களேக் கடந்துபோவார். நாங்கள் பயந்து கானுக்குள் போவோம். அவர் பார்க்கிற பார்வை வேறு எங்களேப் பயங்காட்டும். நாங்கள் சிலேற்றுப் புத்தகத்தால் முகத்தை மறைத்துக்கொண்டு ஒரு காதல் பார்வை (பார்வை மாத்திரம் தான்) பார்த்துவிடுவோம். அப்பப்பா! என்ன பயங்கரம்.

ஒரு நாள் அந்த ஆசிரியரை நான் தனியாகச் சந்திக்க நேர்ந்துவிட்டது. "டேய்!" என்ருர் (அந்தக் காலத்தில் மாணவர்களே அன்போடு அழைக்கும் முறையிது) என்ன நடக்குமோ என்ற திகில். "எப்பிடி உரும்பிராய்ப் படிப்பு" என்று ஒரு கேள்வி போட்டார். கொஞ்சம் ஆறுதலாக இருந்தது, ஏனென்ருல் இதை விடக் கடுமையையல்லவா நான் எதிர்பார்த்திருந்தேன். என்னபதில் சொல்வது? படிப்பைப்பற்றி அபிப்பிராயம் சொல்லக் கூடிய தகுதியுண்டா எனக்கு? நான் ஒரு விதமாக மயிந்தினேன். "என்னடா, மசிந்திருய், உனக்கெல்லாம் இந்தப் பள்ளிக் கூடங்கள் பிடிக்காது. நீ அண்ணமலே யூனிவசிட்டிக்குப்போ" என்று ஆசீர்வதித்தார், யூனிவசிட்டி என்ற வார்த்தை முன் எப்போதுமே கேட்டிராத புது வார்த்தை. யூனிவசிட்டி என்ருல் என்ன என்றே தெரியவில்லே. அந்த ஏளனத்துள் உண்மை ஒளிந்து கிடந்தது. அவரது ஆசீர்வாதம் ஏறக்குறையப் பத்து ஆண்டுகள் கழித்துப் பலித்தது. இது ஆச்சரிய மல்லவா?

—தொடரும்.

---

# பிழை திருத்தம்

39.ம் பக்கம் **வளருந் தமிழ்** பகுதியில் **இனமுழக்கம்** மாதஇதழ் என்பது வார இதழ் என்றிருக்க வேண்டும். 43-ம் பக்கம் 44-ம் வரி **கற்றி** என்பது **கற்கி** என்றிருக்க வேண்டும். 45-ம் பக்கம் 15-ம் வரி **கீறிடப்பட்டவை** என்பதற்குப் பதிலாக **தடித்த எழுத்திலுள்ளவை** என்று வாசிக்குக. இந்தப் பிழைகளுக்காக வருந்துகின்ருேம்.

—ஆசிரியர்.

"நகைச்சுவையும் நல்ல கருத்தும் கலந்தென்றும
பகையுணர்ச்சி மாய்க்கும் பட் பட்."

# "பட் பட்"

— தாண்டவக்கோன் —

செ. சண்முகலிங்கம், வேலணை கிழக்கு, வேலணை.

கே. தற்காலத்தில் மாணவ, மாணவிகள் பாடங்களைப் படிக்காமல் காதல் பாடங்களைப் படிக்கின்றார்களே, இதன் மர்மம் என்ன?

ப. மர்மம் இருக்கட்டும். அந்தப் பாடசாலை எங்கே இருக்கின்றது? திருவாளர் அடியேனுக்கு ஒரு அட்மிஷன்' எடுத்துக்கொடுக்க முடியுமா?

மு. வேலாயுதபிள்ளை, நில அளவையாளர், வீரவிலை.

கே, சென்ற (ஏப்ரல்) மாதம், எத்தனையோபேர் நல்ல கேள்விகள் கேட்டிருக்க, யாழ்ப்பாண மாணவர்களைப்பற்றிக் கேட்டிருந்த ஒரு மலாயா மங்கைக்குப் பரிசளித்தீர்களே, எதனுல்? மாணவர்களைத் தாக்க உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தந்ததனுலா? கேள்வி கேட்டவர் ஒருபெண், அதுவும் செல்வி என்பதனுலா? அல்லது வியாபார தந்திரமா?

ப. நல்ல கேள்விகட்குப் பரிசளிப்போம் என்று நாம் கூறவில்லையே! சிறந்த கேள்விக்கு இரண்டு ரூபா பரிசு என்றுதானே அறிவித்திருந்தோம். செல்வி. கமலா அவர்களின் கேள்வியை மதித்தேன் சிறந்ததென்று, கொடுத்தேன் பரிசை!

அ. ஆனந்தக்குமாரசாமி நடுத்தெரு, காரைநகர்.

கே. கட்சி விட்டுக் கடசிபாய்பவர்களைப்பற்றித் தாங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்?

ப. தாம் மூர்க்கருமல்ல, முதலையுமல்ல என்பதை நிரூபிப்பதற்குப் படாத பாடு பட்டுவரும் குரங்குகள்!

க. மனோகரன், கல்வியங்காடு.

கே. உங்கள் மகள் கன்னிக் 'கலைச்செல்வி'க்கு யாரைத் திருமணம் செய்ய நிச்சயித்திருக்கிறீர்கள்?

ப. ஒளவைப் பாட்டியைப்போல், காலம் முழுவதும் கன்னியாகவே இருந்து கன்னித்தமிழுக்குத் தொண்டு செய்ய அவள் தீர்மானித்து விட்டாள். மன்னிக்கவும்!

செ. இராசகோபால கிருஷ்ணன், வலந்தலைச் சந்தி, காரைநகர்.

கே. ஒரு தேர்தல் அபேட்சகருக்கும், ஒரு நடிகனுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

ப. இரண்டு பேருமே நடிகர்கள்தான். ஒருவர் பணத்தைக் கொடுத்து நடிக்கின்றார், மற்றவர் பணத்தைப் பெற்று நடிக்கின்றார்.

செல்வி. சி. சத்தியபாமா, இடைக்காடு, அச்சுவேலி.

கே. விஞ்ஞான பாடத்தில் தீவிரமாக முன்னேறும் மாணவர்கள் கணித பாடத்தில் பின் தங்கி நிற்பதேன்?

ப, 'எனக்கு எல்லாப் பாடமும் ஓடும்; கணக்குத்தான் ஓடாது,' என்று சொல்வது பெருமைக்குரிய விஷயம் என்று மாணவர்கள் நினைப்பதால்! 'கணக்கு கஷ்டமான பாடம் தான்; அதில் எல்லாரும் கெட்டிக்காரர்களாக இருக்கமுடியாது' என்று சொல்வதன் மூலம் தம்மைத்தாமே உயர்த்திக் கொள்ளும் சில கணித ஆசிரியர்கள் இருப்பதால்!

கே. அண்ணு! எதிரே வரும் பொதுத் தேர்தலில் எக்கட்சி ஆட்சிப்பீடத்திற்கு வரும்? தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப. என் அபிப்பிராயம் இது தான் சகோதரி! இலங்கை ஜனநாயக நாடு என்று சொல்லிக்கொள்ளப் படுகின்றது. ஆகவே தேர்தலில் வெற்றியடையும் கட்சி தான் ஆட்சிப்பீடத்திற்கு வரும்.

ந. கணேசன், தோருந்தோட்டம், மானிப்பாய்.

கே. ஈழத்தின் சிறப்புக்குரிய புலவர் யார்?

ப. தங்கத் தமிழ்த் தாத்தா சோமசுந்தரப்புலவர். சமீபகாலத்துப் புலவர்களுள் தமிழகம் முழுவதும் போற்றிப் புகழப்படுபவர்கள் நால்வர்: புத்தேரிக் கவிஞர் (தேசிக விநாயகம்பிள்ளை), புதுச்சேரிக் கவிஞர் (பாரதி தாசன்), நவாலிக் கவிஞர் (சோமசுந்தரப் புலவர்), நாமக்கல் கவிஞர் (இராமலிங்கம்பிள்ளை). இவர்களுள் புத்தேரிக் கவிஞரும், நவாலிக் கவிஞரும் இன்று இல்லை.

பி. வி. ஜெயரட்னம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

கே. ஒரு இளைஞன் எப்பொழுது தன்னை உணர்ந்து நடந்துகொள்கின்றுன்?

ப. காலில் முள் தைத்தபின்பும், கல்அடித்த பின்பும், வாழைப்பழத் தோலில் வழுக்கி விழுந்தபின்பும்!

நா. பாலசுப்பிரமணியம், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.

கே. ஆண்களிடம் இருக்கும் கற்புக்கும் பெண்களிடம் இருக்கும் கற்புக்கும் உள்ள வேற்றுமை யாது?

ப. நமது சமுதாயக் கண்ணேட்டத்தில்—ஆண்களின் கற்பு பொன்குடம், பெண்களின் கற்பு மண்குடம். பொன்குடத்தில் ஆக்கும் உணவிலும் பார்க்க மண்குடத்து உணவிற்கு ருசியும் மதிப்பும் அதிகம். ஆனல் மண்குடம் உடைந்தால் உடைந்தது தான். பொன்குடம் உடைந்தால் அல்லது நெளிந்தால், அதைத் திருத்திக் கொள்ளலாம்!

ம. வ. கானமயில்நாதன், வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.

கே. "கலைச்செல்வி" மகளிர் மலர் ஆவணியில் வெளியாகும் என்று தெரிகின்றது. அப்படியானல் இளைஞர் மலர் எப்பொழுது?

ப. மாணவர் குழந்தைகள் திட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தி, இளைஞர் மன்றம் ஒன்றை ஆரம்பித்து இளைஞர்களை ஒன்று சேர்க்கவும், சென்ற ஆண்டைப் போலவே "வளரும் எழுத்தாளர் மலர்" ஒன்றை வெளியிடவும் த. இ. மன்றச் செயற்குழு தீர்மானித்துள்ளதாக ஆசிரியர் கூறுகின்றுர்.

கே. 'சமூகத் தொண்டன்' "விடி வெள்ளி"யும் சுதந்திரனில் அரசியற் கட்டுரைகள் எழுதும் "விடிவெள்ளி"யும் ஒருவர்தாஞ?

ப. சமூகத் தொண்டன் ஆசிரியர் திரு. கே. பி. முத்தையா அவர்களைத்தவிர, வேறு எவராவது "விடிவெள்ளி" என்ற பெயரில் எழுதுவதாகத் தெரியவில்லை. திரு. முத்தையா அவர்களே "சங்கிலி" என்ற பெயரில் சுதந்திரனில் தேர்தல் கூட்டங்கள் சம்பந்தமான விமரிசனங்கள் எழுதியுள்ளார். பல ஆண்டுகட்கு முன் "விடி வெள்ளி" என்ற பெயரிலேயே "தினகரனி"ல் சில அரசியல் கட்டுரைகள் எழுதியிருக்கின்றுர்

நா. இராஜநாதன், செல்வநாதன் ஸ்ரோர்ஸ், சுன்னுகம்.

கே. அரசியற் சிம்மக் குரலோன் டாக்டர் நாகநாதனைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப. "நா காக்க!".

க. சுப்பிரமணியம், களபூமி, காரைநகர்.

கே. யாழ்ப்பாணத்துப் பெண்களிற் சிலர் குனிந்து நடப்பதேன்?

ப. தலைக் கனத்தினுல்!

கே. "தமிழோசை" என்னும் பத்திரிகை வருவதில்லையே, ஏன்?

ப. தமிழார்வம் ஒன்றையே மூலதனமாகக் கொண்டு ஆரம்பமாகும் பத்திரிகைகட்கு ஏற்படும் கதி அதற்கும் ஏற்பட்டு விட்டது. பத்திரிகை வேலைகளுக்காக அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்த ஒருவர் உத்தியோகம் மாற்றலாகிச் சென்றதும், பதிப்பாசிரியர் மேற்படிப்பிற்காகப் பல்கலைக் கழகம் சேர்ந்ததும் வெளிவராததற்குக் காரணமாயிருக்கலாம். பதினைந்து சதத்தைக்கொண்டு மதிப்பிடும்போது 'தமிழோசை'யின் சேவை பாராட்டுதற்குரியது—"பதவி உயர்வு" கதையைத் தவிர!

கே. பெண்ணைத் தொட்டதும் ஆயிரம் கண்கள் உண்டாகியது அந்தக் காலத்தில். இன்று பெண்ணைத் தொட்டால்?

ப. ஆயிரம் கண்ணறைகள் உண்டாகும்—நமது பணப்பையில்!

பெ. அருள்பிரதாசன், பரமேஸ்வரக் கல்லூரி.

கே. யாழ்ப்பாணத்தார், வன்னியார் என்னும் பாகுபாடு முல்லைத்தீவு, வவனியா போன்ற இடங்களில் நடந்து வருகின்றது. இதன் காரணம் என்ன?

ப. பொதுத் தேர்தல்தான் காரணம். தேர்தலில் வெற்றி ஈட்டுவதற்காக இந்தப் பிரிவினை உணர்ச்சியைச் சிலர் கிளறிவிட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத்தார் மீதோ, வேறு எந்தப் பகுதி மக்கள் மீதோ, எவ்வித வெறுப்பும், கோபமுமின்றி, ஆக்கபூர்வமான வழியில் இது பற்றிச் சிந்தித்தார்களாளுல், வன்னி நாட்டார் மிக விரைவில் முன்னேறலாம். எல்லாவற்றுக்கும் முதல், தம் தாழ்வு மனப்பான்மையை அவர்கள் விட்டொழிக்க வேண்டும்.

பொன்வண்டு, திருநெல்வேலி.

கே: தற்கால எழுத்தாளர்களின் கற்பனை ராஜா-ராணிக் கதைகளில் செல்லாமல் சமூக கதைகளில் செல்கிறதே, ஏன்?

ப. கடவுளைப்பற்றியும் அவருடைய லீலாவிநோதங்களைப்பற்றியும்விபரித்து விளக்குவது தான் இலக்கியம் என எண்ணப் பட்டது ஒரு காலத்தில். அதற்கடுத்த கால கட்டத்தில் அரசர்களைப் பற்றி எழுதுவதும், அந்தப்புரத்து அந்தரங்கங்களை அலசி ஆராய்வதும் தான் அமர இலக்கியம் என்ற கருத்து நிலவியது. பிரான்சிய அரசியற் புரட்சிக்குப் பின்புதான் சாதாரண மக்களை, அவர்களுடைய ஆசாபாசங்களை, ஏக்கங்களை, நோக்கங்களைப் பற்றி இலக்கியம் சமைக்கத் தொடங்கினர். சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களைப்பற்றி, ஏழைத் தொழிலாளர்களைப்பற்றி இலக்கியம் எழுந்தது ரஷ்யப் புரட்சிக்குப் பின்பு "மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு" என்று' நம்பப்படும் இக்காலத்தில், இந்நாட்டு மன்னர்களாக இருக்கும் எல்லாரைப் பற்றியும் எழுதுவதுதானே சிறந்த இலக்கியமாக இருக்கமுடியும்?

மா. நாகராசா, கொட்டாஞ்சேனை.

கே. கைரேகை சாஸ்திரத்தில் தங்களுக்கு நம்பிக்கையுண்டா?

ப. சோதிடத்திலும் பார்க்க அதிக நம்பிக்கை எனக்குண்டு, கைரேகை சாஸ்திரத்தில். சித்திரம் வரைவதற்கு உபயோகிக்கின்ருர்களே காகிதம், அந்தக் காகிதத்தில் தங்

கள் உள்ளங்கை அடையாளத்தைத் தெளிவாக எடுத்தனுப்புங்கள், தங்களைப் பற்றிய சுவையான — முக்கியமான சில செய்திகள் கூறலாம்.

குறிப்பு :—அஞ்சலட்டையில் கீழ்க்கண்ட முகவரியை வெட்டி ஒட்டாத நேயர்கள் என்பதிலை எதிர்பார்த்து ஏமாற வேண்டாம்.

— தாண்டவக்கோன்.

தாண்டவக்கோன்
மே/பா கலைச்செல்வி.
சுன்னுகம்.

---

அட்டைப்படம் : இவ்விதழில் ஆரம்பமாகும் "ஓவியக் கலை" என்ற கட்டுரையை எழுதியுள்ள திரு. க இராசரத்தினம் அவர்கள் நல்ல பல ஓவியங்களை வரைந்துள்ளார். அவற்றுள் ஒன்றை (Oil Painting செய்தது) இம்மாத அட்டையில் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்ருேம்.

---


## எமது மலாயா ஏஜண்ட்.

# MEENA VILAS BOOK DEPOT

Book Sellers & News Agents,

760, Main Road : : Tampin.

மலாயாவிலுள்ள எமது வாசக நேயர்களும் ஸப் - ஏஜண்டுகளும் மேற்கண்டோரிடம் "கலைச் செல்வி" பிரதிகளைப் பெறலாம்.

# அறிவு வளர்ச்சிப் போட்டி இல. 2

## சரியான விடையும் பரிசு பெற்றோர் விபரங்களும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ | ச | ங் | தா | ■ | வீ |
| ர | தீ | ■ | வ | த | ம் |
| ம் | ■ | பி | டி | ப் | பு |
| ■ | வா | ன் | ■ | பு | ■ |
| தெ | ன் | ஊ | ■ | ■ | க |
| ■ | மீ | ■ | இ | ரு | ள் |

இந்தமுறையும் எவருமே சரியான விடை அனுப்பவில்லை. பதினான்கு பேர் ஒரு பிழையுடன் விடையனுப்பியிருந்தனர். திருவுளச் சீட்டுப்படி பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**முதலாவது பரிசு: ரூபா 15.**

பெறுபவர் :- செல்வி மலராசனி ஆறுமுகம்,
"திருப்பதி" சுதுமலை கிழக்கு, மானிப்பாய்.

**இரண்டாவது பரிசு: ரூபா 10.**

பெறுபவர் :- செல்வன். அ. ஆனந்தக்குமாரசாமி,
நடுத்தெரு, காரைநகர்.

ஒரு பிழையுடன் அனுப்பிய மற்றையோர் :- S. சிவனருள்பாதம், முத்துத்தம்பி வித்தியாசாலை, திருநெல்வேலி; செல்வி. க. கமலாதேவி, கொல்லந்தோட்டம், அளவெட்டி; செல்வி. பத்மாவதி வேலுப்பிள்ளை, கோண்டாவில்; பொ. வரதராசன், கந்தரோடை, சுன்னாகம்; செல்வி. க. பவானி, 20, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி; மு. சுத்தானந்தம், "பத்மனகம்", சங்கானை; K. T. இராசா, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்; பொ. ஜெயராசசிங்கம், சண்டிருப்பாய் வடக்கு, சண்டிருப்பாய்; செல்வி. தெ. மீ. இராஜேஸ்வரி, 'தமிழகம்' 6, (Professor's Quarters), அண்ணாமலை நகர்; து. புவனேந்திரன், அளவெட்டி; சி. க. ஜெயராசா, சங்கானை கிழக்கு, சண்டிருப்பாய்; செல்வி. M. இராசநாயகம், இந்துமகளிர் விடுதி, திருநெல்வேலி.

கீழ்க்கண்டோர் இரு பிழைகளுடன் விடை அனுப்பி யிருந்தனர்.

M. லலிதாம்பிகை, கந்தரோடை, ம. திருஞானசம்பந்தன், சுன்னுகம், அ. போதராணி, அரியாலை, Miss. T. K. சிவராசா, கோப்பாய், சு. சுந்தரராசா, கோப்பாய், றெஜீனு. ஆசீர்வாதம் யாழ்ப்பாணம S. K. தர்மபூபதி, பெண்கள் கிருஷிக பாடசாலை, திருநெல்வேலி, இ. தற்பராதேவி, வேலணை கிழக்கு, செல்வி. சசிகலா நடேசன் புசல்லாவை, அ, தற்பரானந்தன், கந்தரோடை, வ. மா. பத்மநாதன், உடுவில் தெற்கு, ப. ஆனந்தபாஸ்கரன், இணுவில் மேற்கு, க. கனகசிங்கம், இணுவில் கிழக்கு, வ. இ. செல்லத்துரை. ஆசிரியர் சிறுப்பிட்டி வடக்கு. நா. இராதாலிங்கம், அளவெட்டி தெற்கு, சி. ரகுநாதன், திருநெல்வேலி கிழக்கு, பொ. சிவதாசன், ஸ்கந்தவரோதய விடுதி, K. ஹரிஹரசர்மா, கொழும்பு, S. பாலசுப்பிரமணியம் செங்குந்தா இந்துக்கல்லூரி, பொ. சண்முகநாதன், சங்குவேலி தெற்கு, சி. சிவரத்தினம், சுன்னுகம், க. மாணிக்கேந்திரன், சுன்னுகம், சீ. காசிவிஸ்வநாதன், வீமன்காமம் ஆங்கிலபாடசாலை, பொ. ஈஸ்வரதாசன், சங்குவேலி தெற்கு, வே. கணேசமூர்த்தி, யாழ்ப்பாணம், சி. சந்திரா, பெண்கள் கிருஷிக பாடசாலை, க. சுப்பிரமணியம், களபூமி, காரைநகர். நாகேஸ்வரி இராமநாதன், கொக்குவில், க. சிவசண்முகராஜா, கோப்பாய் தெற்கு, ச. சுந்தரமூர்த்தி, காங்கேயன் துறை.

# அறிவு வளர்ச்சிப் போட்டி : இல. 3.

**முதற்பரிசு: ரூபா 15 - இரண்டாவது பரிசு ரூபா 10.**

**பிரவேசக் கட்டணம் இல்லை.**

*(1)* போட்டிக் கூப்பனும் குறிப்புகளும் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. **கலைச் செல்வி யிலிருந்து வெட்டி எடுக்கப் பட்ட கூப்பன்களில்** விடைகளை மையினுல் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.

2. இப்போட்டியின் சரியான விடை 'சீல்' செய்யப்பட்ட உறையுள் வைத்து, திருநெல்வேலி **இலங்கா நிதி லிமிற்றெட்** தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

3. போட்டி ஆசிரியரின் எழுத்துக் கெழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதலாவது பரிசும், அடுத்து ஆகக்குறைந்த பிழைகளுடன் அனுப்பவருக்கு இரண்டாவது பரிசும் அளிக்கப் படும். ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடை அனுப்பி யிருப்பின் திருவுளச் சீட்டுப்படி பரிசுகள் அளிக்கப்படும். யாருமே சரியான விடை அனுப்பாது இருந்தால், ஆகக்குறைந்த பிழைகளுடன் அனுப்பியோருக்குப் பரிசுகள் கொடுக்கப் படும்.


4. கலைச் செல்வி அலுவலகம், கலாதேவி அச்சகம் ஆகிய வற்றை சேர்ந்த எவரும்இப்போட்டியில் பங்கு பெற அனுமதிக்கப்படார்.

5. போட்டியின் முடிவு திகதி: 20-7-60.

6. ஏதாவது சிக்கல்கள் ஏற்படின் போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

7. விளக்க மில்லாமல் அங்கும் இங்கும் கீறிட்டு,மை ஊற்றி அனுப்புவோரின் விடைகள் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

8. விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி: அறிவு வளர்ச்சிப் போட்டி இல. 3. "கலைச் செல்வி" கந்தரோடை, சுன்னாகம்.



## குறிப்புகள்

**இடமிருந்து வலம்**

1. கம்பன் காவியத்தின் கதாநாயகன்.
4. இது தலைகாக்கும்.
6. அன்பே இதுதான்.
8. நடனமாடுவோர் அடிக்கடி உபயோகிக்கும் சொல்.
9. இது இருக்கும் வரை முத்தி கிடையாது.
10. திக்கு.
11. இது ஒரு மிருகம்.
12. அன்பிலிருந்து பிறப்பது.

**மேலிருந்து கீழ்.**

1. இதைத் தின்ற குரங்கு சும்மா இருக்குமா?
2. சிலருக்கு இதில் நம்பிக்கை யில்லை-
3. பெண்களுடன் தொடர்பு டையது
5. சந்திரன்.
6. கண்ணனை நினைத்தால் இதையும் நினைப்போம்
10. "அழகுடைய" என்பது இதன் பொருள்.

# நான் நினைப்பவை

எஸ். பொன்னுத்துரை

[இப்பகுதியில் நாடகம், கவிதை, கதை, ஆகிய எழுத்துத் துறைகளைப் பற்றி நான் நினைப்பவற்றை எழுதுவேன். எழுத்தாள நண்பர்கள் என் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை; திணிக்கவுமில்லை. என் கருத்துக்களைப் பகிர்ந்து, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் என்பது என் நம்பிக்கை.

ஈழத்தில் மாரிகாலத்தில் தோன்றும் ஈசல்களைப் போன்று எண்ணிக்கையில் உப்பிப் பெருத்துள்ள கதாசிரியர்களை மனதிற் கொண்டு சிறுகதைத்துறையை முதலில் கலக்கிப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன்.

சிறுகதை இலக்கியத்தில் பல உட்பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு தனிப் பிரிவையும் தனித்தனி எடுத்துக்கொள்வது சௌகரியமானது. எடுத்த எடுப்பில், சிறுகதைத்துறையில் மிகச் சிரமமான உருவகக்கதைப்படைப்பினைப்பற்றி நான் நினைப்பவற்றை எழுதுகிறேன்...]

## I. உருவகக் கதைகள்

உருவகக் கதைகள், வசன நடையில் அமைவதாலும், பொதுவாக—உள்ளடக்கமான— கதை அமைப்பும் பெற்றிருப்பதினாலுந் தான் சிறுகதையின் உட்பிரிவில் இடம் பெறுகின்றன. சிறு க்கதை வட்டத்திற்குள் இணைந்தும், அப்படி இணையாத தனித்தன்மை பெற்றும் விளங்குகின்றன உருவகக் கதைகள்.

உருவகக்கதைகளைப்பற்றி நினைக்கும் பொழுது, எனக்கும், எனது எழுத்தாள நண்பர் ஒருவருக்கும் சில அண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றசம்பாஷணை யொன்று நினைவுக்கு வருகிறது.

"——"பத்திரிகைக்கு ஒரு கதை எழுதும்படி கேட்டிருந்தார்கள், நான் ஓர் உருவகக் கதை எழுதி அனுப்பியிருக்கிறேன்."— கண்களில் மகிழ்ச்சி மின்னலிட அந்த நண்பர் கூறினர்.

"நானும் சமீபத்திலேதான் உருவகக்கதைகள் என்ற துறைக்குள் காலடியெடுத்து வைத்திருக்கிறேன். வெற்றி தோல்வியைப் பொறுத்தி

ருந்துதான் பார்க்க வேண்டும். உருவகக்கதையின் சிருஷ்டியில் அதிகம் கலை நுணுக்கம் இருப்பதினால், அது மிகவும் சிக்கலும் சிரமமுமுள்ள இலக்கியத்துறை என்பது என் கருத்து. உருவகக் கதையில் அதிகம் ஈடுபாடில்லாத நீ எப்படி அத்துறைக்குத் தாவினாய்?'' என்று நான் கேட்டேன்.

‘‘அப்படியொரு சிரமம் இருப்பதை நான் உணரவில்லை. நான் ஒரு சிறுகதை எழுதினேன். அது சின்னஞ்சிறு கதையாக அமைந்துவிட்டது. தண்ணீர் ஊற்றிப்பெருக்கவும் வழியில்லை. உடனே ஒரு யோசனை உதித்தது மனிதர்களாக இருந்த பாத்திரங்களையெல்லாம் மிருகங்களாக்கினேன். உருவகக்கதை ஜனித்து விட்டது'' என்று மிக உத்ஸாகமாக, தன்னுடைய சாமர்த்தியத்திற்குத் தானே தன் முதுகைத் தட்டிக்கொடுக்கும் மனோபாவத்தில் பேசி முடித்தார்.

அவர் மட்டுமல்ல, ‘ஈழத்துக் க. நா. சு.'வுக்கு பாதந்தாங்கும் ‘கட்டுரைக் கரும்பார்' ஒருவரும், சமீபத்தில் வெளிவந்த பஞ்சகதைகளொன்றில், உருவகக்கதை எழுதித் துன்பப்பட்டதையும் நான் அறிவேன். ‘சின்னஞ்சிறு கதை,' ‘ஒருநிமிடக் கதை,' ‘ஒரு பந்திக்கதை' ஆகியவற்றின் மிருகப்பதிப்புத்தான் உருவகக் கதை என்று நினைப்பது தவறு.

மனித வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை முடிச்சவிழ்க்கும் பணியும் இலக்கியம். எந்தச் சிக்கலையும் முடிச்சையும் அவிழ்க்க உருவகக் கதை சிறந்த சாதனம். பெரிய புயலையும் எதிர்த்து நிற்கும் நாணலின் வலிமை உருவகக்கதைக்கு இருக்கின்றது.

உருவகக் கதை அளவில் சிறியது என்பது உண்மை. அதைப்படைக்க. வார்த்தை வளமும், கற்பனைத் திறனும் மட்டும் இருந்தால் போதாது

ஓர் உருவகக் கதையை வாசிக்கும் வாசகன், ‘நல்லது' என்று வெறும் சப்புக் கட்டிவிட்டு, உடனடியாக அவன் பத்திரிகையின் மற்றப்பக்கத்தைத் திரும்புவானாகில், அந்த உருவகக் கதை தன்னுடைய இலக்கிய அந்தஸ்தை அடையத் தவறிவிட்டது என்றுதான் அர்த்தம். உருவகக்கதையில் ஒரு நுணுக்கமான கருத்து, அல்லது சித்தனையைக் கிளறி சீரிய கருத்தொன்றினைப் பிரசவிக்கச் செய்யும் கரு, மறைந்து கிடக்கிறது. அதை வாசித்து முடித்த வாசகனின் மனதிலே, வலுவுள்ள உருவகக் கதை ஒரு உண்மையை அல்லது நீதியை நர்த்தனமாடச் செய்யும்.

சிந்தனையைத் தூண்டும் தன்மையும், நீதி, போதிக்கும் குணமும் உருவகக் கதைக்குச் சிறப்பியல்புகளாக அமைந்திருப்பினும், அதன் ஆசிரியர், வாசகனுக்குச் ‘சிந்தனைக் குளிகை, வழங்கும் வைத்தியனாகவோ, அல்லது நீதி போதிக்கும் உபதேசியாராகவோ மாறிவிடக் கூடாது. உலக இலக்கியத்தில் நாளது இன்று வரை சிறந்த உருவகக் கதைகளை—பரப்பிலும், ஆழத்திலும்—படைத்தவன் கிரேக்க அடிமை ஈசாப்தான். ஆனால் ஈசாப் அவற்றின் முடிவில் ‘நீதி'களை விளம்பரப்படுத்தி இருப்பதினால், இலக்கிய அந்தஸ்தில் மோசம் போய், குழந்தை இலக்கியமாக வாழ்கின்றன! நல்ல வேளையாக இன்று எந்தக் கதாசிரியனும் தான் படைத்த உருவகக் கதையின் அடியில், தான் சொல்லவந்த கருத்தினையோ அல்லது நீதியையோ தடித்த எழுத்தில் போடும் நிலையில் இல்லை.

உருவகக் கதை உருவத்தில் சிறியதே அல்லாமல், பரப்பில் பெரியது. அது ஆலம்விதை. மிகப்பூதாகாரமாக வளர்ந்து நிழல் பரப்பும் ஆலமரத்தின் தன்மைகள் முழுவதும் அடங்கியுள்ளன. வீட்டுக் கூரையின் ஒரு சிறு நீக்கலினால் உள்நுழையும் ஒரு பிரி கதிரிலேகூட வானவில்லின்

ஏழு வர்ணங்களும் கலந்திருப்பது போல, உருவகக்கதையில் பல எழுச்சிகளின் கீதங்கள் இழைந்திருக்கின்றன. உருவகக்கதை என்பது வீணை, அதை நாம் சிந்தனையென்ற விரல்களினுற்றுன் மீட்டி, நாதம் எழுப்பி, அனுபவிக்கவேண்டும். அபசுரம் ஏற்பட்டால் 'பழி'யை வாசகனின்மீது சுமத்துவது அறிவுடமையாகாது. வீணைக்குத் தந்திகளைப் பூட்டிக் கொடுக்காது நாம் செப்படிவித்தை காட்ட முடியாதல்லவா?

உருவகக் கதையை வாசிக்க அதிக நேரம் பிடிப்பதில்லை. ஆனுல் அதன் கருத்து இலேசில் மனதை விட்டகல்வதுமில்லை. அதன் கருத்து நமது மனதில் பல வருட காலத்திற்குச் சுழன்று கொண்டே யிருக்கும். 'நரியும் திராட்சையும்' அல்லது 'காகமும் வடையும்' ஆருவது வயதில் நாம் வாசித்துள்ள உருவகக் கதைகள். இத்தனை ஆண்டுகளுக்கு கிடையில் நாம் எத்தனையோ கதைகளை வாசித்திருக்கிறேம். ஆனுல் நரியும் திராட்சையையும். காகமும் வடையையும் நாம் மறக்கவில்லை. இன்னும் மனதில் சுழலுகின்றன. உண்மையானஉருவகக்கதைகளுக்கு இந்த வலிமை தான் இருக்கின்றது.

மிருகங்களையும், ஜடப்பொருட்களையும் பேசவைத்துச் செப்படி வித்தை காட்டுவதுதான் உருவக்கதை யென்று நினைப்பது மிகத்தவருன கருத்து. கருத்துக்களை இலேசாகச் சொல்வதற்கும, தந்தச் சிமிழில் குங்குமம் அடைத்து வைப்பதைப் போன்று, உருவகத்தைக் குறுக்குவதற்கும், பாத்திர அறிமுகத்தில் குணவிசேடங்களுக்கு வார்த்தைகளை விரயம் செய்யாது, சொல்லவந்த கருத்திற்கு அழுக்கம் கொடுப்பதற்கு, மிருகங்களும் ஜடப்பொருட்களும் கைகண்ட சாதனங்களாக இருப்பதினுலேதான் அவ்வாறு கையாளுகிருர்கள். உதாரணமாக குள்ளத்தனமுள்ள கார்த்திகேசுவை அறிமுகப் படுத்துவதிலும் பார்க்க, நரியைச் சொல்லிவிட்டால் குணவிசேடங்கள் தானுக அமைந்து விடுகின்றன. உண்மை இதுவாக இருக்க, 'ஈ அடிச்சான்காப்பி' மாதிரி உருவகக்கதைகள் அமைக்கத் துணிவது பேதைமை. மனித பாத்திரங்களையே வைத்து, கலீல் இப்ரானும், கவி தாகூரும், வி. ஸ. காண்டேகரும் அழகான உருவகக்கதைகள் எழுதியிருக்கின்றனர். ஆகவே மிருகப் பாத்திரங்களையும், ஜடபாத்திரங்களையும் வைத்து எழுதப்படும் கதைகளே உருவகக் கதைகள் என்று நினைப்பது, கொக்கைப் போன்று வெள்ளை நிறமான பாலைக்குடித்து விக்கி இறந்த குழந்தையையும், ஸ்பரிசத்தினுல் யானையின் உருவத்தையும் அறிய முனையும் அந்தகர்களுடைய நிலையையும் ஒக்கும்.

உருவகக் கதைக்குக் கற்பனை வளமும், சிந்தனையைத் தூண்டும் சிறந்த கருத்தும், நீதி அல்லது உண்மை போதிக்கும் குணமும் அடங்கினுல் போதாது. அதற்குத் தனித்துவ உருவம் தேவை. சிறுகதையிலும் பார்க்க உருவகக் கதைக்கு உருவம் மிகவும் அவசியமானது. இலக்கியத் தராசில் நிறுக்கப்பட்ட வார்த்தைகளின் செட்டான பிரயோகத்தினுல், உருவம் அமைய வேண்டும். தேவையற்ற ஒரு சொல்லேனும் இடம் பெறக் கூடாது. ஒரு சிறு குன்றியில், நூறு யானைகளை வைத்து அடைக்கும் திறமைவாய்ந்த மலபார் சிற்பியின் கை வண்ணத்தை நாம் அறிவோம். ஒவ்வொரு யானையும் ஒரு மண் அளவு பரிமாண முள்ள தந்தத்தில் செய்யப்படுகிறது. ஆனுல் ஒவ்வொரு குறுணியிலும், யானையின் அங்க அமைப்புகள் முற்றுகப் பதிக்கப் பட்டிருக்கின்றன. சிறுதுகள் தந்தத்தில்செய்யப்படும் யானையிலுள்ள உருவமும், கலை நுணுக்கமும், சிறந்த ஒரு ஆசிரியனிடமே உருவகக்கதை பெறுகின்றது. இந்தச் சிரமங்களை உணர்ந்துதான் பலர் இத்துறையை எட்டியும் பார்க்க

வில்லை யென்று என்க்குப் படுகின்றது.

தமிழில் உருவகக்கதைகள் மிகவும் ஒறுப்பு. ஈசாப் கதைகள்; பஞ்சதந்திரக் கதைகள்; தாகூர், வி. ஸ. காண்டேகரின் உருவகக்கதைகள்;— இவற்றின் தமிழாக்கங்களே சிறந்த உருவகக்கதைகளாக இன்றுதிகழ்கின்றன. இருப்பினும் சமீபகாலத்தில் ஜ. சாமிநாதன் என்பவர் இத்துறையில் கணிசமான வெற்றியீட்டியிருக்கின்றார் என்று தான் சொல்லவேண்டும்.

தமிழ் நாடே உருவகக்கதைத் துறையில் சோடை போயிருக்கின்றது என்றால், ஈழநாட்டைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஆனால் சு. வே. அவர்கள்உருவகக்கதைக்குச் செய்துள்ள சேவைகள் எமது இலக்கிய வளர்ச்சியில் இடம் பெறும். இ. நாகராஜன் அவர்களும் ஓரளவு முனைந்தாலும், ஜய ஸ்தம்பத்திற்கு எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கின்றது. (நானும் சில உருவகக் கதைகளை எழுதியிருக்கிறேன்.) ஈழத்தின் ஏனைய உருவகக் கதைகள் குறைமாசத்தில் செத்தே பிறந்துவிட்ட சிசுக்கள்!

---


ஜொலிக்கும் வைரங்கள்

அழகிற் சிறந்த ஆபரணங்கள்

இவைகட்கு எம்மிடம் வாருங்கள்!

நவநாகரிக டிசைன்களில்

நகைகள் குறித்த காலத்தில்

ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்

பிரகாசா ஆபரண மாளிகை,

Prop: S. ஞானப்பிரகாசம்

83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# இடது சாரிகள்

அநுசுயா

நேருவுக்கும் நீலப்பனுக்கும், பண்டாரநாயக்காவுக்கும் பத்திராஜுவுக்கும், சமத்துவமாக ஒவ்வொரு வாக்குத்தான் உண்டு, என்ற சித்தாந்தத்தையடக்கிய சர்வஜன வாக்குரிமை வந்தபின்பு, பொது ஜனங்களுக்கு அரசியலில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. இந்த விழிப்புணர்ச்சிக்கு இடது சாரிகள் எனப்படும் கட்சியாரே சிறந்த மூல காரணர் என்பது பிழையாகாது. பொருளாதார சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இக் கட்சியார் செய்து வரும் பிரசார வேலைகள் பலவாகும்.

இவர்களைப் பற்றிய நன்மை தீமைகளை இக்கட்டுரையில் ஆராயப்போகின்றேனென்று வாசகர்கள் எதிர்பார்த்தால் நிச்சயம் ஏமாந்து போவார்கள். அரசியல் வாதம் என்னும் சேற்றிலே காலைப் புதைத்துக் கொண்டு அவதிப்பட விரும்பாதவன் நான். தங்கமான மனிதனாக இருந்தாலும் அரசியலில் ஈடுபட்டால் அவன் அயோக்கியனாய் விடுகின்றானென்று பலர் நம்புகிறார்கள்.

நடுத்தரமான பணக்காரனொருவனிடம், கொஞ்சம் பழையதான ஒரு மோட்டார் வாகனமும்; ஒரு யோக்கியனிடம் அரசியல் வாதமும், புகுந்துகொண்டால் அவர்கள் சீக்கிரத்தில் சீரழிந்து கெட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கை உடைய நான் அரசியல் இடது சாரிகளைப் பற்றி எழுதுவது என் கொள்கைக்கு மாறான குற்றமாகுமே! ஆயினும், கலைச்செல்விப் பிரியர்களுக்கு ஒரு சந்தேகம் உண்டாகக்கூடும். மகாத்மா காந்தியும் அரசியல் வாதி தாமே! அவரையும் இந்த வரிசையில சேர்த்து விட்டேனென்று கசப்படைந்து என்னைக் கண்டிக்கவும் முற்படுவார்கள். காந்தி மகான் "தானே தனக்கு உவமையாய் வாழ்ந்த அரசியல் வாதி" என்பது உலகறிந்த உண்மை. அல்லாமலும், பெரும் பான்மையைத் தழுவித்தான் "விதிகள்" அமைய வேண்டுமென்பது இலக்கண மரபு. இம் மரபுப்படி அவ் விதி. இக்கட்டுரைக்கும் பொருந்துவதாகும்.

அப்படியானல், இக் கட்டுரை எவ்விஷயத்தை நோக்கமாகக் கொண்டு எழுந்திருக்

கின்றதென்று வாசகர்கள் அறிய விரும்புவார்கள். சமீபத்திலே தீபாவளியும், நத்தார்ப் பண்டிகையும். வந்தபோது புடவை வியாபாரி மாரெல்லாம் எத்தனையோ விதமான சாரிகளைப் பற்றி விள்ம்பரஞ் செய்தார்கள். மணிப்புரி சாரி, மைசூர்ச்சாரி, காஷ்மீர்சாரி, அந்தச்சாரி, இந்தச்சாரி என்றெல்லாம் பறையடித்தார்கள். விளம்பரங்களில் வெளியான ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொரு சாரியை என் மனைவிக்கு வாங்கிக் கொடுத்ததினால், என் பணத்திலும் ஒரு பகுதி ஒழிந்து போய் விட்டது. அப்படியான வியாபாரிகள், இத்தலைப் பெயரைக் கண்டு கொண்டால் இதுவும் ஒரு புதுவகையான சாரியாகும் [Saree] என்று நம்பிக்கொண்டு இது எங்கே இருக்கிறது? இதன் மொத்த வியாபாரிஎவர்? ஏகவிநியோகத்தர் யார்? என்று அறியத் துடிதுடிப்பார்கள். முந்திக் கொள்வதுதான் வியாபாரத்தின் மூலவேர் என்பதைத் தெரிந்து கொண்ட வர்த்தகர்களும் இதை வாசித்து ஏமாந்து போவார்கள்!

பரீட்சைகளிற் சித்தியடைந்த இக் காலப் படித்த பெண்மணிகள் பலர். தங்களுக்குச் சுதந்திரம் சமத்துவம் வேண்டுமென்று, நமது முன்னோர்கள் பெண்களை அடிமையாக நடத்தி வருகின்ருர்களென்றும் நம்பிக்கொண்டு சங்கங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும், தங்கள் கருத்துக்களை வெளியிட்டுக் கிளர்ச்சி செய்து வருகின்ருர்கள். நமது பழம் பெரும் பழக்கவழக்கங்களைப் படித்துப் பார்த்தால் பெண்களுக்கு எவ்வளவு சமத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பது இலகுவில் தெளிவாகும்.

இப்போது கொய்யகம் (கொய்சகம்)தெரிய விட்டுஉடுத்துக் கொண்டிருக்கும் பெண்களுட் பலர் வெளியே செல்லும் போது கணவன் மாரை முன்னே விட்டுத் தாங்கள் பின்னேயே நடந்து செல்கிருர்கள். கொய்யகம் தெரியாமல் மறைத்து உடுக்கும் பெண்கள் புருஷனுக்குப் பக்கமாக நடந்து செல்கிருர்கள். இவற்றுள் எது சரியென்று பெண்கள் சிந்திக்கும் காலம் இது!

நமது இந்து சமயத்தில் ஒரு சிறப்புண்டு. கடவுளை அம்மை அப்பராக-தாய்தந்தையராக-அர்த்த நாரீஸ்வரராகக்-காட்டி உலகியல்பை எடுத்து விளக்கும் ஒரு பெரிய உண்மையை நிலைநாட்டுகிறது நம் சமயம். சிவனுடைய உருவத்தில்சரிபாதி இடப்பக்கமே பெண்ணுருவமாக அமைந்திருக்கின்றது. இதனுல், பெண்களுக்கு எவ்வளவு சமத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை அறிவதுடன் பெண்கள் புருஷன்மாருக்கு இடப்பக்கத்திலே நடந்து செல்வது சரியானதென்பதும் தெளிவாகிறதல்லவா?

கடவுள் முன்புறத்தில் ஆண் உருவமும் பின் புறத்தில் பெண் உருவமும் அமையாமல் இருப்பது பெண் குலத்துக்கே பெருமை தரும் செய்கையாகும். எனவே உண்மையான இடது சாரிகள் (இடப்பக்கத்திற்குச் செல்பவர்கள்) பெண்களே தான் என்பதை வாசகர்கள் மும்முறையும் ஒப்புக்கொள்வார்கள். இன்னுமொரு செய்கையும் இதை வலியுறுத்துகின்றது! பெண்கள், தங்கள் சாரிகளை இடதுபக்கத் தோளிலே போட்டு அணிந்து கொள்வதினாலும் இடது சாரிகள் பெண்கள் என்பது வெளியாகின்றது. ஆகையால், குடும்ப அரசியலில் பெண்கள் இடதுசாரிகளாய் வாழ்ந்து, தவறு செய்யும் வலது சாரிகளாகிய ஆண்களைத் திருத்துவதற்கு முன் நிற்க வேண்டும். ஆனால், தேச அரசியலில் இடது சாரிகள் வலதுசாரிகளை எதிர்த்துச் சில வேளைகளில் ஆட்சியையும் கைப்பற்றிக்கொள்வது போலப், பெண்களும் குடும்ப அரசியலில் ஆட்சியைப் பெற்று வலது சாரிகளாய் விடாமல் என்றும் இடது சாரிகளாய் வாழவேண்டுமென்பதுதான் எனது விருப்பம்!

**வாழ்க பெண்குலம்!**
**வளர்க இடது சாரிகள்!!**

---


உங்கள்

# அச்சு வேலைகள்

சிறப்பாகவும் செலவு குறைவாகவும்

## இருக்கவேண்டுமா?

## எம்மிடம் வருக.

# கலாதேவி அச்சகம்.

ஸ்ரேசன்வீதி, : : சுன்னுகம்.

# லங்கா நிதி லிமிற்றெட்

நிரந்தர சேமிப்புக்கு, கீழ்க் குறிக்கப்பட்ட வீதம்

## வட்டி கொடுக்கப்படும்.

1 வருடம் - 6 சத வீதம்.
2 வருடம் - 7 சத வீதம்.
3 வருடம் - 8 சத வீதம்.
5 வருடம் - 9 சத வீதம்.

சேமிப்பு கணக்கிற்கு

**வருடம்**
**5 சத வீதம் வட்டி கொடுக்கப்படும்**

நவீன சேமிப்பிற் சேர்ந்து பல நன்மைகளையும் அடையுங்கள்

இலங்கையில் விசேஷமாக ஏற்படுத்தப்பட்டது.
முழு விபரங்களும் இலங்கா நிதி ஆபிசில் அறியலாம்.

# இலங்கா நிதி லிமிற்றெட்

திருநெல்வேலி : : யாழ்ப்பாணம்

கிளை:
284, காங்கேசன் துறை வீதி : : வண்ணார்பண்ணை

# ஈழத்தில்

# பத்திரிகைகளின் வளர்ச்சி

— மன்றுகிழார் —

ஈழத்திலே பத்திரிகைகளின் வளர்ச்சி குறித்து எழுதுவதற்கு முயலும் போது வேறோர் சிந்தனை உதிக்கின்றது. பத்திரிகை என்ற சொல் சங்கதமா தமிழா என்ற எண்ணம் முனைந்து நிற்கின்றது. புதினச் செய்தித்தாள் என்ற பொருளில் இச் சொல் சங்கத மொழியிற் பயிலப்பட்டதாக இல்லை. தமிழ் மொழியில் அதுவும் பிற்காலவழக்கில் செய்தித்தாளைக் குறிக்கவந்துள்ளது. ஆனல், பத்திரிகைகள் தோன்றவில்லை.

**இந்தியாவிலிருந்து ஏராளமான தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இலங்கையில் அவை பெருமளவில் விற்பனையாகின்றன. இருந்தும் இலங்கை எழுத்தாளர்கட்கு அப் பத்திரிகைகள் இடம் கொடுக்கத் தயங்குகின்றனவே! இங்குள்ள யாராவது துணிந்து நல்லதொரு பத்திரிகையை வெளியிடக் கூடாதா?—என்ற ஏக்கம் இங்குள்ள பலரிடம் உண்டு. அவர்கள் எல்லாருக்கும் இக் கட்டுரை பயனளிக்கும் என நினைக்கின்றோம். கட்டுரையாளர் அரசாங்க ஊழியர். தமிழ் அறிஞர்.**

பரவலாயின. போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் காலத்திலே வேதபோதக வேலைகள் ஆரம்பமாயின. நூல்கள் அச்சிடப்பட்டன. ஒல்லாந்தர் காலத்தே 1737ல் அச்சியந்திரம் இங்கு கொண்டுவரப்பட்டதெனினும் 1739லேதான் தமிழ்நூல் ஒன்று இலங்கையில் அச்சிடப்படலாயிற்று. வேறும்பலநூல்கள் காலவரையில் அச்சடிக்கப்பட்டன ஏனினும் பத்திரிகை

ராதிபர், பத்திராசிரியர் என்ற பிரயோகங்களை நினைக்கும் போது அவை விசித்திரமான கருத்துக்களைத் தருகின்றன. பத்திரிகா என்ற சொல் தமிழ் மொழியிற் பத்திரிகை என நிற்கும். ஆகவே பத்திரிகையதிபர், பத்திரிகையாசிரியர் என்றே பயிலப்படுதல் வேண்டும். இது இவ்வளவில் நிற்கட்டும்.

இனி, ஈழத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் எவ்வாறு தோன்றின என்பதனை ஆராய்வாம். மேலைநாட்டுப் பழக்கவழக்கங்கள் அரசியல் முறைகள் வேதபோதகங்கள் இவையெல்லாம் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகையுடன் இங்கு

ஆங்கிலேயர் காலத்திலேதான் இலங்கையிலே பத்திரிகைகள் தோன்றலாயின. இலங்கை ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டதும் அமரிக்கன் மிசியோன்மார் இங்கு வேதபோதகஞ் செய்ய வந்துசேர்ந்தனர். அமரிக்கன் மிசியோன் மாரில் ஒருவரான கறற்று என்பார் 1821ல் அச்சியந்திரமொன்றைக் கொணர்ந்தனர். ஆங்கிலேயருக்கும் அமெரிக்கருக்கும் இடையில் அக்காலத்தில் அவ்வளவு அந்நியோந்நியம் நிலவவில்லை. இதனுல் கறற்று இலங்கையை விட்டகன்றார். அச்சியந்திரமும் வேறு மிசியோன்மாருக்குக் (Church Mission) கைமாறியது. இதனை யோசேப்பு நைற்று என்ற பாதிரியார் ஏற்று

"முத்திவழி" என்ற நூலினை முதன் முதலாக வெளியிட்டனர். யாழ்ப்பாணத்தில் அச்சேறிய முதற் தமிழ் நூல் இதுவே.

1834ல் அரசாங்கத்திற்கும் அமரிக்கன் மிசியோன் மாருக்கும் நட்புரிமை ஏற்பட்டது. அச்சியந்திரம் நல்லூரிலிருந்து மறுபடியும் மானிப்பாய்க்கு வரலாயிற்று. இவ்வச்சியந்திரத்திலேதான் ஈழத்திலே தமிழ் மொழியில் வெளிவந்த முதற் பத்திரிகை வெளிவரலாயிற்று, முதலாவது இதழ் 1841ம் ஆண்டு தைமாதம் 7ந் தேதி வியாழக்கிழமை "உதயதாரகை" வெளிவந்தது. கால்மடிப்பு அளவில் எட்டுப்பக்கங்களையுடையது மாதமிருமுறை பிரசுரிக்கப்பட்டது. தமிழ், ஆங்கிலம் என்னுமிரு மொழிகளிலும் கலந்து அச்சிடப்பட்டது, பெரும்பாலும் தமிழ்; விசேடமானவை மாத்திரம் ஆங்கிலத்தில். எஃறி மாட்டின் (இவரின் புத்திரன் சத்தியவேத பாதுகாவலனுக்கு ஆசிரியராகவிருந்தார்) செத்பேசன் என்ற இருவரும் தமிழ்ப்பகுதிக்குப் பொறுப்பாயிருந்தனர். இப்பத்திரிகை 1847ல் வாரப்பத்திரிகையானது. 1856ல் முற்றும் தமிழ்மயமானது.

சிறந்த தமிழ் அறிஞர் இருவர் இதனைத் திறம்பட நடாத்திவந்தனர். கரோல் விசுவநாதபிள்ளை 1857ல் உதயதாரகைப் பத்திரிகை ஆசிரியர் பதவியைத்துறந்து சென்னைக்குச் சென்றபோது ஆர்னோல்டு சதாசிவம்பிள்ளை அதன் ஆசிரியரானார். இவ்வேலையை நாற்பது வருடகாலமாகத் தொடர்ந்து நடாத்தி வந்தார். இவ்விருவரின் எழுத்து சொன்னயம் பொருணயமுடையதாய் எவரையும் வசீகரிக்கும் தன்மை வாய்ந்திருந்தது. கரோல் விசுவநாதபிள்ளையின் எழுத்துக்கோர் உதாரணம்.

"குடியின் முடிபு"

"கூத்தினால் வருவது குடியே, குடியினால் வருவது முடிவே. சென்ற சில கிழமைக்கு முன்னதாக மல்லாகக் கோவிற்பற்றைச்சேர்ந்த அளவைப் பகுதியில் நாட்டியம் பழக்குமோர் அண்ணாவி தன் வயிற்றிலீட்டிய கள்ளு சாராயத்தினால் மாட்டப்பட்டு அறிவழிந்து சடுதியாய் உயிர் துறந்தனர்"......

உதயதாரகை 20-1-1857

ஆர்னோல்டு சதாசிவம்பிள்ளையின் எழுத்து எடுத்த எடுப்பிலேயே தொடுத்துச் சொல்லும் தன்மையது. அதற்கும் ஓர் உதாரணம்.

திருவாலங் காட்டான் தெண்டமிறுத்தான்,.

"தேங்காய் திருடினவனிருக்கத் திருவாலங் காட்டான் தெண்டமிறுத்தான் என்ற வடகரைப் பழமொழி பிறகிட்டகிழமை எமக்கு ஞாபகத்தில் வந்தது. மெஸ்டன் லோப்பு வீட்டுக்காரியத்தையிட்டு மெஸ் அத்துவக்காத் கூல்டுக்கு விநோதமாய் ஒரு மறியல் விருந்து கிளம்ப அவர் தென்படாமலிருக்க அவர் அங்கே இங்கே என்ற கதை கண்டபடி பிறக்க எங்கள் பொலிஸ் வீரர் தண்டாயுதபாணிகளாக ஊர் தேசங்களெங்கும் இராப்பகலாய் பறந்து தேடித்திரிய, தவணைக்கு முதனாளாகிய 11ந் திகதியன்று அவர் தாமாய் பொலிஸ் நீதவான்கையிற் தம்மை ஒப்புவித்த அந்தக்காரியம் அம்மட்டில் நிற்க எங்கள் ஏசன்றர் சில தலைமைக்காரருடைய கிரீடத்தைக் கழற்றியது துக்கமான காரியமே......

பண்டைத் தமிழகத்துப்புலவர்களையும் அவர்கள் செய்த நூல்களையும் பற்றிய உணர்ச்சியும் ஆராய்ச்சியும் இலங்கையிலே கொழும்புமாநகரத்திலேதான் முதன் முதலாகத் தோன்றலாயின. தாய் நாட்டில் சாமிநாதையர் தோன்றுவதற்குப் பல்லாண்டுகள் முன்னரே புத்தளத்திற் பிறந்து கொழும்பில் வாழ்ந்த சைமன் காசிச் செட்டி தமிழ்ப்

புலவர் சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டனர். ஊர்தேச சரித்திரப் பத்திரிகையை இலங்கையிலே முதலிற் தோற்றுவித்தார். இப்பத்திரிகை ஆங்கிலத்தில் வெளிவரலாயிற்று. தமிழிலும் ஒருபத்திரிகை உதயமாவதை விரும்பி 1841ம் ஆண்டு "உதயாதித்தன்" என்றோர் பத்திரிகையை வெளியிட்டனர். இது பதின் மூன்று மாதங்களுக்கே ஓடியது. பின் நின்றுவிட்டது. இதனை நாம் கண்ணுரப்பார்த்ததில்லை.

அமரிக்கன் மிசியோன்மார் முதிர்ந்தோர்க்கும் வாலிபர்க்கும் உதயதாரகை என்னும் பத்திரிகையை நடாத்தியதுபோல், பாலியர்க்கும் ஓர் பத்திரிகை நடாத்தத்துணிந்தனர். இம்முயற்சி பெரிதும் போற்றுதற்குரியதே. சான்டசு, இச்கொக் என்ற மிசியோன்மார் மேற்பார்வையில் 1859ம் ஆண்டு கார்த்திகை மாதம் "பாலியர் நேசன்" என்ற மகிமை நாமததுடன் பாலியர்க்குப்பத்திரிகையொன்று உதயமாயிற்று. உவில்லியம் சின்னத்தம்பி என்ற உடுப்பிட்டி வாசி இதன் ஆசிரியராவர். பாலியருக்காக வெளிவந்த இச்செய்தித் தாள் சிசுப்பிராயத்திலேயே மரணகதிக்கு உட்படலாயிற்று. நோய் நொடியின் காரணமோ அன்றி அதன் சாயலோ நமக்குக் கிடைக்கவில்லை.

1859 எங்கே? 1923 எங்கே? எத்தனை ஆண்டுகள் கழிந்தன. சிசு மரணவேதனை காரணமாகப் பலவருடங்களாகப் பாலன் பிறந்தானல்லன். 1923 உருதிரோற்காரி ஆண்டு ஆடி மாதம், தேதி தெரியவில்லை, பாலன் ஒருவன் இலங்கையின் தலைநகரத்திலே பிறந்தான் "பாலர் மித்திரன்" என்ற பெயரும் பெற்றான். இது சைவசமயக் குழந்தையெனினும் சமரச ஞானம் படைத்த பிள்ளை. இந்து கலா விருத்திச் சங்கத்தாரால் பராமரிக்கப்பட்டது. பிரம்மசிறி பத்துமநாபையர் இதன் ஆசிரியர். ஆடி, ஐப்பசி, தை, சித்திரை மாதங்களில் மூவருணச் சித்திரங்களுடன் மலர்முகம் நற்காட்சி அளித்து வந்தது. பெரியோர் பலரின் அமிர்த வாக்கியங்கள் நிறைந்திருந்தன. வாசகத் திரட்டு, செய்யுட்டிரட்டு, கதை என்ற பாகங்களையுடையது. பாலர்க்கேற்ற வசன நடை; சொல்லலங்காரங்கள் விநோதக்கதைகள். நுண்ணறிவு வினாக்கள், சொற்சுவை மிக்கபாக்கள் இப் "பாலர்மித்திரனை" அலங்கரித்தன. மலர் 1 இதழ் 1 எல்லாமாக 72 பக்கங்களையுடையதாக வெளிவந்திருந்தது. இதன் மறைவுக்குக் காரணம் இலங்கை வாழ் தமிழ் மக்களே.

முயற்சியிருந்தும் மக்களின் ஒத்துழைப்பில்லாமையால் செத்து மடிந்த வேறு இரு மாத இதழ்களைப் பிரம்ம சிறி பத்துமநாபையர் வெளிப்படுத்தினர். "ஆனந்தசாகரம்" என்பது ஒன்று. "சரஸ்வதி" என்பது மற்றையது. ஆனந்த சாகரம் 1921ல் பிறந்தது. சரஸ்வதி 1928ல் உற்பவமானது. கண்டபலன் ஆண்டொன்றினுள் மரணத்திரை. சட்டி சுட்டது கைவிட்டது என்ற முதுமொழிப்பிரகாரம் சஞ்சிகைநடாத்தும் வேலைக்கு முற்றுப்புள்ளி கொடுத்துவிட்டார். ஐயர் அவர்கள் நடாத்திய சஞ்சிகைகளின் எழுத்தும் போக்கும் போற்றுதற்குரியவை; பெருமுயற்சி; சஞ்சிகைகளிலே சிறப்பியல்புகள் மிகுந்திருந்தன. ஆனால் அவை இறந்து பட்டன. "சிங்களமே" என்ற சட்டம் ஏலவே வராதுதான் காரணம் போலும்.

இலங்கையின் முன்னேற்றத்திற்கு சிறப்பாக யாழ்ப்பாணத்தின் முன்னேற்றத்திற்குத் தொண்டு புரிந்த மற்றைய மிசியோன்மார் கத்தோலிக்கு திருச்சபையைச் சார்ந்தவராவர். இவர்களும் 1876ல் பட்சமொருமுறை வெளிவரும் "சத்திய வேத பாதுகாவலன்" என்ற பத்திரிகையைப் பிரசுரித்தனர். சிறிது காலத்தில் கிழமைதோறும் வெளிவந்தது. ஆங்கிலமும் தமிழும்

கலந்த பத்திரிகை 1894ல் தமிழ்ப்பத்திரிகையாக மாதமிருமுறை பிரசுரிக்கப்பட்டு இன்று கிழமை தோறும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

சைவ சமயத்தவர்களும் தங்களுக்கோர் பத்திரிகை உருவாதல் வேண்டுமென்பதைப் பெரிதும் விரும்பி நின்றனர். 1889ல் உருவாயிற்று; "இந்துசாதனம்" என்ற பெயரும் பெறலாயிற்று. மாதமிருமுறை வெளிவந்து இப்போது கிழமை தோறும் வந்து கொண்டிருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டு உதயமாவதற்கிடையில் இலங்கைநேசன், சன்மார்க்க போதினி, இலங்கைத் தினவர்த்தமானி, தினவர்த்தமானி, முஸ்லிம் நேசன், ஞானாமிர்தம், உதயபானு, சைவாபிமானி, சத்தியாபிமானி வைத்திய விசாரிணி. முதலாம் பத்திரிகைகள் தோன்றிமறைந்தன. 1920 வரையும் ஒருசிலபத்திரிகைகள் தோன்றின வேனும் அவைநின்று நிலைக்கவில்லை. பத்திரிகை விழிப்புணர்ச்சி வீறு பெறவில்லை.

1922ல் "தமிழ்" என்னும் பெயருடன் மாதசஞ்சிகை ஒன்று வெளிவந்தது. உண்மையிலொரு களஞ்சியமாகவேயிருந்தது. தமிழ்க் கழகம் ஒன்று இதனை நடாத்தியது. கழகங்களுக்கு வந்த, வருகின்ற, வருங்கதி இச்சஞ்சிகைக்கும் ஏற்பட்டது. மணமும் குணமும் தெரியாது மறைந்துவிட்டது. ஏனோதானோ அறியேம். தமிழர் போதினி, கலாவல்லி என்ற சஞ்சிகைகளுக்கும் இதே விதிதான். ஆறுபெரும் பொழுதுதோறும் வெளிவந்த "ஞாயிறு" (1933) என்ற சஞ்சிகைக்கு விதிவிலக்கு ஏற்படுமென்ற நம்பிக்கையும் அவலமாயிற்று. இது கற்றார்க்கு மருந்தாகவும் அற்றார்க்குப் பெருவிருந்தாகவும் அமைந்து விளங்கியது. மருந்தும் விருந்தும் நிலைபேறற்றவை. ஆகவே அவைபோன்ற வற்றிற்கும் நிலைபேறில்லை.

முகாந்திரம் சதாசிவஐயர் சிறந்த கருமவீரர்; தியாகி; கடமையிற் கண்ணுங் கருத்துமுடையவர். ஆரியதிராவிடபாஷா விருத்திச்சங்கம் இப்போது ஊசலாடும் உயிருடன் நடமாடுகிறது. இதனை உருவாக்கிய பெருமை ஐயர் அவர்களுக்கே உரியது. இச்சங்கத்தின் சார்பில் முத்திங்கள் வெளியீடாக "கலாநிதி" (1942) என்ற சஞ்சிகையைத் தோற்றுவித்தார் ஐயர் அவர்கள். இதுவும் ஒரு இருவருடம் ஓடிமுற்றுக ஓய்ந்துவிட்டது. தமிழ் என்றால் உயிர் விடுவோம். சத்தியாக்கிரகஞ் செய்வோம் என்றுசொல்லும் மேடைப்பிரசங்கிகள் அதிகரித்த இக்காலத்திலே இச்சங்கமே உயிருக்கு ஊசலாடுவதாயின் மக்களின் தமிழுணர்ச்சி வெறும் பிதற்றலாட்டமேயன்றி உண்மையற்றதென்பதே வெளிப்படை.

இருபத்தைந்து வருடத்திற்கு நற்சேவை புரிந்த ஈழகேசரிக்கு என்ன நடந்தது? இளமை வியாதி வாலிபப்பருவத்தில் நோய் ஏற்பட்டது. பொல்லாத காலன். சிறுவயதிலேயே நற்பெருந் தொண்டுகள் புரிந்த ஈழகேசரி, தாய்நாட்டையும் சேய்நாட்டையும் ஒன்று சேர்த்து தமிழ்ப்பெரும்பணியாற்றத் தமிழகத்தாரைத் தூண்டியது. பழைமைக்கும் பழைமையாய் புதுமைக்கும் புதுமையாய்ச் செந்தமிழ் நடையில் தமிழகம் முழுவதிலும் பத்திரிகை பிரசுரிக்கப் பட்டிருந்தால் அது ஈழகேசரியாகத்தானிருக்கும். குற்றமுள்ள தமிழுக்கு அது இடங்கொடுக்கவில்லை, நற்றமிழ்ச் சேவையே அதன் குறிக்கோளாகும். அதுவும் நின்றுவிட்டது. இலங்கைவாழ் தமிழ் மக்களின் தாய்மொழி ஆர்வத்தை மதிப்பிட ஈழகேசரியின் மறைவு ஒன்றே போதும்.

ஈழநாட்டிலிருந்து கொண்டு தமிழிலக்கியத்திற்கு ஏதாவது ஆக்கவேலைகள் செய்யவேண்டுமென்ற உயர்ந்த இலட்சியத்துடன் 1946ம்

ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை "மறுமலர்ச்சி". இளமை எழுச்சியும், கற்பனைத்திறனும், கலைப் பண்பும் நிரம்பிய இளைஞர்களான தி. ச. வரதராசன், அ. செ. முருகானந்தன், க. செ. நடராசா, ச. ப. சர்மா, மஹாகவி, கனக செந்திநாதன், க. இ. சரவணமுத்து முதலியோர் முழு மூச்சுடன் இப்பத்திரிகையை வளர்ப்பதில் ஈடுபட்டனர். என்றாலும் இரண்டு, மூன்று ஆண்டுகட்குமேல் பத்திரிகை நிலைக்கவில்லை. 'மறுமலர்ச்சி'யின் மறு பதிப்பைப் போல் 1953ம் ஆண்டளவில் வெளியான "ஆனந்தனும்" இரண்டு வயதுடன் தன் வாழ்வை முடித்துக் கொண்டான். வேறும் பல பத்திரிகைகள் அவ்வப்போது வெளிவந்தன. அவற்றுள் உதயம், அல்லி ஆகியவையே குறிப்பிடத்தக்கவை.

சிங்கள முதலாளிமார் தமிழ்மக்களுக்காக ஒரு செய்தித்தாள் நடாத்த முன் வந்து "தினகரன்" என்ற பத்திரிகையை 1932ல் ஆரம்பித்து வைத்தார்கள். அது இன்றும் ஓடிக் கொண்டிருக்கிறது. செந்தமிழில் வெளிவருகின்றது. தமிழறிவுபடைத்த பலர் அங்கு கடமையாற்றியுள்ளார்கள். தொடர்ந்து நற்றமிழ்ப்பணி செய்து வருகின்றார்கள். இவ்வாண்டிலே 'தினகரன்' தமிழ் விழாவினை வெகுவேகத்துடன் நடாத்திக்காட்டயிருக்கிறது.

தமிழ்மக்களுக்கென்றே தமிழ் மக்களால் நடாத்தப்படும் பத்திரிகை 'வீரகேசரி'யாகும். ஆரம்பகாலங்களில் இதன் செல்வாக்கு அளப்பிடற்கரியது. இச்செல்வாக்குக்குக் கருத்தாவாயிருந்தவர் திரு. நெல்லையா அவர்களே. திரு. நெல்லையா இதன் ஆசிரியராக இருந்தகாலத்தே வீரகேசரிக்கு மதிப்பு வர வர ஏறிக் கொண்டே வந்தது. நாவல் என்ற பெருங்கதைகள் நளின மொழி நடையில் உருண்டோடும் வண்ணமாக எழுதப்பட்டன. ஊர்க்குருவி வெகு வாய் உயரப்பறந்தது. அது நில மட்டத்திற்கே வரவில்லை. அதன் கிண்டலும் கிள்ளலும் உண்மைக்கு அப்பால் மயிரிடைதானும் பிறியவில்லை. வீக்கதாக்கம் கிடையாது.

வீரகேசரி இன்றும் நடந்து கொணடுதானிருக்கிறது இடையிடையே சுகவீனம். என்செய்வது! இலக்கணத்தமிழுக்கு வீரகேசரியில் இடமில்லை.

தமிழ் மக்களுககுச் சேவை புரிந்து வரும் இன்னோர் பததிரிகை "சுதந்திரன்" ஆகும். இதன் போக்கு வீச்சம் பொருந்தியது. இருந்தாற்போல் ஆள்வீச்சம் அடிக்கும்; நின்றாற்போல் சமயவீச்சம் அடிக்கும். ஒன்று சேர்ந்தாற்போல் தமிழ் வீச்சம். இது தொடக்கத்தில் தினசரியாகவிருந்தது இப்போது கிழமை தோறும் வெளிவருகின்றது.

ஈழகேசரியின் சாயலில் உருவெடுத்து நற்றமிழ்த்தொண்டு புரியும் மற்றோர் பத்திரிகை 'ஈழநாடு" ஆகும். இது சென்ற ஆண்டிலே தான் ஆரம்பமாயது. போற்றத்தக்க முறையில் பிரசுரிக்கப்பட்டுவருவதை யிட்டுத் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மகிழ்ச்சியடைந்தாற் போதாது. ஆதரவுமிருத்தல் வேண்டும்.

இக்காலத்தே சஞ்சிகைகளுக்கும் பஞ்சமில்லை. கலைச்செல்வி, கலைமதி, கதம்பம், விவேகி முதலாம் சஞ்சிகைகள் தோன்றியுள்ளன. தமிழ்த் தொண்டு கருதியே வெளிவருகின்றன. எது நிறைந்து நிற்கும், எது மறைந்தொழியும் என்று சொல்ல முடியாத முறையில் வெளிவருகின்றன. நீடுவாழ்ந்தால் நல்லதென்பதே எங்கள் பெருவிருப்பம்:

இதுவரை பத்திரிகைகள் ஈழத்திலே தோன்றிவளர்ந்த வரலாற்றினையும் அவற்றுட் சில தொடர்ந்து நின்று தொண்டாற்றும் போக்கினையும் எடுத்துக்காட்டினோம். வீடுபேறுற்ற ஈழகேசரிபோல், தமிழ்த் தொண்டு அல்லது வேறு இல்லை என்ற பான்மையில் உயிர்நீத்த ஞாயிறு கலாநிதிபோல் தமிழ்ப்பணி புரியும் பத்திரிகைகள் வளர்தல் வேண்டுமென்று இறைவனை வேண்டி முடிக்கலாயிற்று.

# பட்ட கடன்

— சொக்கன் —

வேலாயுதம் சந்தையிலிருந்து புறப்பட்டான். மூட்டை தலையில் ஏறியது. வீட்டிற்குச் சரியாக எட்டு மைல் நடந்தாக வேண்டும். 'எப்படி நடந்து தொலைக்கப் போகிறோம்?' என்று கால்கள் அலுத்துக் கொண்டன. என்ன செய்பிறகு பச்சைத்தண்ணீர் கூட இல்லை! வயிறு 'கட முடா' என்று தந்திப் பாஷையில் தன் அவல நிலையை அறிவித்துக் கொண்டிருந்தது. அந்தச் செய்திக்குப் பதில்கொடுக்கக் குறைந்தது இருபத்தைந்து சதமாவது வேண்டாமா?

**அட்டன் பொஸ்கோ கல்லூரியில் தமிழாசிரியராகப் பணி புரிகின்றார் 'சொக்கன்' எழில் கொஞ்சும் தமிழ் நடையில் இனிமை நிரம்பிய பல சிறு கதைகளை எழுதியுள்ளார். தினகரன் சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றார். "செல்லும் வழி இருட்டு" இவரது நல்ல நாவல். "வீரத்தாய்" "மனோன் மணீயம்" ஆகிய நூல்களின் ஆசிரியர். நல்ல சில நாடகங்களையும் இவர் பேனா படைத்துள்ளது.**

வது? 'அழுதழுதும் அவள் தானே பிள்ளைப்பெற வேண்டும்?' தளர்ந்து தயங்கிய கால்களைத் தூக்கிவைத்து அவன் நடந்தான்.

பாரம் தலையை நெரித்தது. கழுத்தே முறிந்து விடுவது போன்ற பிரமை: தலையின் இரு பக்கங்களையும் கிட்டி போட்டு நெருக்கிப் பிடிப்பது போல ஒரு விறைப்பு! இத்தனைக்கும் மேலாக அடிவயிற்றிலிருந்து நெருப்புப் போலக் கிளம்பிய அகோரமான பசி!

காலையில் பொன்னம்மா தந்த கோப்பிதான்! அதற்குப்

சந்தையிலேதான் எத்தனை வகையான உணவுகள்! அவித்த மரவள்ளிக் கிழங்கு; வாய்ப்பன்; பனங்காய்ப் பணியாரம்; அடடா! மனிதனின் கண்களுக்குக் கண்ணியல்லவா வைக்கின்றன!

வேலாயுதத்தின் வாயில் நீர் ஊறியது, உண்மையே! மரவள்ளிக் கிழங்கையும், பச்சைமிளகாய்த் துவையலையும் ருசித்து ருசித்துச் சாப்பிடுவது போல அவன் கனவு கண்டதும் வாஸ்தவந்தான்! ஆனால் கனவு கனவாகவே நின்றுவிட்டது! வாய்க்கும். வயிற்றிற்கும் அடிமையாகும் நிலையிலா

அவன் இருக்கிருன்? அவன் கையையே எதிர்பார்த்திருக்கும் பத்துச் சீவன்களுக்கு என்ன பதில் சொல்வது?

இப்படியாக, காலையிலிருந்து மாலை வரை பாசத்திற்கும் கடமைக்கும் நம்பிக்கையூட்டி, அதே சமயத்தில் வயிற்றை ஏமாற்றிக் கொண்டு நேரத்தைப் போக்கிவிட்டான் அவன்!

ஒரு விதமாக வியாபாரமும் முடிந்தது. வேட்டித் தலைப்பின் ஒரு மூலையிலே, அன்றைய பங்கான பத்துச் சதத்தையும் சேர்த்துப் பார்த்தபொழுது, அவன் முகத்திலே ஓர் அலாதியான மலர்ச்சி ஏற்பட்டது. 'அப்பாடா! பத்துரூபாய் சேர்த்தாய் விட்டது' என்று நிம்மதிப் பெருமூச்சோடு சொல்லிக் கொண்டான். கடந்த நூறு நாட்களாய் வயிற்றை ஏமாற்றி மிச்சம்பிடித்த காசல்லவா அது? "பாவம்! பொன்னம்மா! நான் மத்தியானத்தில், அவித்த மரவள்ளிக்கிழங்கு வாங்கிச் சாப்பிடுகிறேன் என்றதை நம்பிவிட்டாள்" என்று நினைத்துக் கொண்டபொழுது, சிரிப்புச் சிரிப்பாய் வந்தது அவனுக்கு!


பொன்னம்மா அவனுக்குச் சொந்த மச்சாள். கடந்த பன்னிரண்டு வருஷங்களாய் மனைவி என்ற ஸ்தானத்தில் அவன் குடிசையிலே அவள் இருந்தாலும், சின்ன வயதிலே அவர்கள் ஒன்ருய்க் கூடி விளையாடியவர்கள் தாம்!

அந்தக்காலத்தில் கூடப் பொன்னம்மாவை ஏமாற்றுவதில் அவனுக்குப் புரிபடாத ஓர் ஆனந்தம்! 'கீச்சு மாச்சுத் தம்பலம், கீயா மாயாத் தம்பலம்' என்று சொல்லிக்கொண்டு, மண்ணுக்குள்ளே ஈர்க்கைப் புதைப்பதுபோல் காட்டிக் கைக்குள்ளேயே ஈர்க்கை மறைத்த நாட்கள்! கடையிலே மண்ணெண்ணெய் வாங்கி வரும்பொழுது வளவுப் படலைக்குப் பின்னுல் நின்று, அவள் படலையைத் திறக்க 'டொஸ்' என்று சப்தம் போட்டு அவளைப் பயமுறுத்திய சம்பவங்கள்...! உம்! அந்த நாட்கள் திரும்பியா வரப்போகின்றன?

வேலாயுதம் பெருமூச்சோடு எழுந்துபோய்ச் சில்லறையை மாற்றித் தாளாக்கினுன்; அதே கையோடு, வீட்டிற்கு வேண்டிய சாமான்களையும் வாங்கினுன். வாங்கினதென்ன? 'வாங்கினேன்' என்று பெயர் பண்ணினுன். அவ்வளவுதான்! இந்தக் காலத்திலே எட்டு ரூபாய்க்குச் சந்தை முழுவதையும் வாங்கிவிட முடியுமா? ஏதோ பொன் வைக்கிற இடத்தில் பூ வைத்ததுபோல், அவள் சொல்லிவிட்ட சாமான்களிலும் அரைக்கரைவாசிதான் வாங்க முடிந்தது!

# இரங்கிடு

—நீலாவணன்—



களளத் தனமாகச் சன்னலில் நின்று கணைதொடுத்து
கொள்ளை அடித்தெந்தன் நெஞ்சிலே தீயைக் கொழுத்தியின்று
அள்ளச் சுரக்கின்ற ஊற்றுநீர் என்ன அகத்துறையும்
கள்ளி உனக்கிந்தக் காதல் பிரிவு கனிரசமே...?

போர்த்த இருளைப் புறங்காண விண்ணில் புதுநிலவு
பூத்துப் பொலியும் அடியே!என் நெஞ்சிற் புயலெழுந்து
ஆர்த்துப் புலம்பி அனுங்கும் அதனை அடக்கமுத்து
கோத்த நகைநீ வரவிலை யேல்வரும் கூற்றுவனே!

வில்லின் வளைந்த புருவச் சுவருள் விளங்குமிரு
கொல்லும் சுழல்விழிக் கோல்கொடு நெஞ்சம் குடைந்துகுடைந்(து)
அல்லும் பகலும் அகலாது வாழ்வமென் றன்றுரைத்த
எல்லாம் பழங்கதை யாகிய தோஎன் இனியவளே!

சந்திரன் தன்னையும் வெல்லவிஞ் ஞானம் சமைத்தெடுத்த
எந்திரம் போலும்விண் நோக்கி எழுந்த இளமுலைகள்
சந்ததம் எந்தன் மனக்கிர கத்தினைச் சாடுகின்ற
விந்தை அறியாய்! விதிவசம் யான்படும் வேதனையே!

சாலிக் கதிரென நாணம் தலையைச் சரித்துவைக்க
தாலி கழுத்தினைத் தாவிய பின்னர் தனியறையில்
போலிக் கதைகள் புகல்வர் அதிலென் புதுமையடி?
ஆலிலை மெத்தை அதன்றோநம் காதல் அரண்மனையே!

மூச்சை இறுக்கிப் பிழிகையில் "முத்தமிட் டார்"என்முன்
கீச்சுக் குரலில் கிளிசெய்த கிண்டலைக் கேட்டதனுல்
போச்சுது பெண்மையின் மானமென் றஞ்சிப் புலம்பியஅக்
காய்ச்சல் இனுமா தணியா? திரங்கிடு கண்மணியே!

ஒவ்வொரு முறையும் இப்படித்தான். மகராசி! சந்தைக்குப் புறப்பட்டால் போதும், குறைந்தது இருபது இருபத்தைந்து சாமான்களுக்காவது பட்டியல் கொடுக்காமல் இருக்க மாட்டாள். வேலாயுதத்திற்கும் அத்தனையும் அவசியம் என்று தெரியும்! ஆனால் தெரிந்து என்ன பிரயோஜனம்? பணப் பைக்குமல்லவா அது ஒத்துக் கொள்ள வேண்டும்?

ஒரு படியாகச் சாமான்களும் வாங்கியாயிற்று. ஒரே ஒரு பத்து ரூபாவைத் தவிரத் துடைத்து விட்டது போலக் 'கொட்டப் பெட்டி' காலியாகவே இருந்தது. வெறிச்சென்று இருக்கக் கூடாது என்பதற்காய் வைத்திருந்த இரண்டே இரண்டு சதங்கூடக், கடைசியாய்ச் சுண்ணும்பு வாங்கும் போது கொடுத்தாகி விட்டது! இனிச் சந்தையில் என்ன வேலை?

வேலாயுதம் நடந்துகொண்டிருந்தான். சிந்தனை வண்டுகளோ பத்து ரூபாவையே சுற்றி வட்டமிட்டன. அந்தப் பத்து ரூபா! அதில் ஒரு பெரிய சரித்திரமே அடங்கிக் கிடக்கிறது! வேலாயுதம் கொட்டப் பெட்டியை ஒரு தடவை நசித்துப் பார்த்துக் கொண்டான். அதற்குள் மடித்து வைக்கப்பட்டிருந்த பத்து ரூபா, ஓர் இன்பக் கிளுகிளுப்பையே ஏற்படுத்தியது!

அவனை மனிதனாய் நிமிர்ந்து நிற்க வைக்கும்சக்தி, அதற்கு உண்டு என்பதில் சந்தேகமேயில்லை! வேலாயுதம் சிந்தித்தான்.

ஊரில் அரைவயிற்றுக் கஞ்சிக்கும் உழைக்க முடியாத நிலையேற்பட்ட பொழுது, தான் வவனியாவிற்குப் புறப்பட்டதை நினைத்துக் கொண்டான். போவதற்குப் பணம் வேண்டுமே? அழைத்தவர்கள் "நீ அங்கை வா. வயலிலே வேலை புடிச்சுத் தாறம்" என்று மட்டுந்தானே சொன்னார்கள்? பணத்திற்கு வழி என்ன?

இரண்டு நாட்களாய் வேலாயுதம் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டான். வீட்டில் பசி, முணு முணுப்பில் தொடங்கி, ஓலமாய் வளர்வதை அவனால் சகிக்கக்கூடவில்லை!

அப்பொழுதுதான் பொன்னம்மா அந்த யோசனையைச் சொன்னாள். அதைக் கேட்ட பொழுது அவனுக்கு ஏற்பட்ட வேதனை! "ஒருவன் எதையும் செய்யலாம்? பெண்சாதியின் தாலியை அடகு வைக்கலாமா? என்னதான் இருந்தாலும்......! சேச்சே! அது கூடவே கூடாது."

"அவளின் இரட்டைவடச் சங்கிலியிலிருந்து, மூக்குமின்னி வரை எல்லாவற்றையும் விற்றேன். அதிர்ஷ்டம் வரும், வரும் என்று எண்ணிப் பணத்தைத் தோட்டத்தில் கொண்டுபோய்க் கொட்டினேன். ஒவ்வொரு முறையும் புயலும், மழையும் வந்து எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டது. கடைசியில் தோட்டமும் போயிற்று."

"அவைதான் போகட்டும். தாலியைக் கொண்டுபோய் எப்படி அடகு வைப்பது? வாங்குபவன்கூட என்னை ஏளனமாய்ப் பார்ப்பானே." என்று வேலாயுதம் எண்ணி எண்ணி மனம் புழுங்கினான்; வேதனை அவன் நெஞ்சைக் குத்திக் குதறியவண்ணம் இருந்தது. மனச்சாட்சி சிந்தையைக் கீறிக் கிழித்துச் சித்திரவதை செய்தது!

ஆனால் கடைசியாய் வேறுவழி தெரியாத நிலையில் அடுத்த வளவுக் கந்தரிடம், தாலியை அடகு வைத்தான். அவர் அடகு என்றில்லாமல் பணந்தர வந்தபொழுதுகூட, அவன் மறுத்துவிட்டான்! அது ஒரு பைத்தியகாரத்தனந்தான்! முதலிலே உண்டான வேதனையின் பிறகு ஏற்பட்ட உறுதி, யாரிடமும் கடன் வாங்கக்கூடாது என்ற முடிவை ஏற்படுத்தியிருந்தது! அடகு ஒன்பது ரூபா! வட்டியும் எல்லாமாகப் பத்து ரூபா! ஒருவழியாய்ச் சேர்த்தாயிற்று!

கடமை தீர்ந்தது என்ற மனக்குதிப்பில் வேலாயுதம் பாரத்தை மறந்து நடந்தான்; அந்தப் பத்து ரூபாவின் மேல் பரப்பப்பட்ட நம்பிக்கை என்ற பூக்குவியல் மீது, நடப்பது போலக் கெம்பீரமாய் நடந்தான்.

பொழுது சாய்ந்துகொண்டிருந்தது. தைமாதத்துப் பனிப்புகார் வானத்துக்கும், பூமிக்குமிடையே மண்டலமிட்டுக்கொண்டிருந்தது. வெளிச்சக் கம்பங்களைச்சுற்றி ஈசல்கள்



நான் பட்டகடன் இண்டைக்குத்தான் தீர்ந்தது....

'நொய்' என்று சப்தமிட்டுப் பறந்துகொண்டிருந்தன. வானத்து நீலப் பட்டடையின் ஒரு மூலையில் குளிர்சாந்து வட்டமாய் வழிந்து தெறித்துக் கிடந்தது.

தெருவின் இரண்டு பக்கங்களிலும் இருந்தவயல்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தன. பயிர்த்தலையே தெரியாத அவ்வளவு வெள்ளம்! அந்தவெள்ளத்திலிருந்து மண்டுகங்களின் இரைச்சல் எழுந்து காதைத் துளைத்தது.

நேற்றும் இன்றுந்தான் மழை இல்லை! அதற்கு முதல் மழையா பெய்தது? மேகத்தைத் தாறுதாருய் வாளைத் தாறைக் கிழிப்பது போல கிழித்துக் கொண்டல்லவா மழை கொட்டியது! தண்ணீரிலே கரைகிற உப்புப்போல, யாழ்ப்பாணத்துக் கமக்காரனின் எதிர்காலக் கனவுகளெல்லாம், அந்த மழையோடு சேர்ந்து கரைந்து தான் போய்விட்டன!

நாலு மாதங்களின் முன்ஞல் வவனியாவில் பெய்தமழை அவன் நினைவில் வந்தது. அந்த மழைக்கு இந்த மழை ஒரு தூசு! இடி முழக்கத்தில் காது செவிடாகாமல், மின்னலில் கண் குருடாகாமல் தப்பியது அவன் அதிர்ஷ்டந்தான்! வவனிக்குளம் உடைத்துக்கொண்டு கடல்போல் பெருகிக்கிடந்ததை நினைத்தால் இப்பொழுது கூட மண்டை விறைக்கிறது!

இந்தநிலையில் வயல்வேலை யாவது மண்ணுங்கட்டியாவது! அவன் திரும்பி வந்ததே பெருங் காரியம்! வீணுகப் போக்குவரவில் ஒன்பது ரூபாவைப் பாழடித்ததுதான் மிச்சம்! 'நாய்க்கு நடுக் கடலிலும் நக்குத் தண்ணீர்' என்பார்களே? தெரியாமலா சொல்கிருர்கள்?

தாலி அடகில் போயிற்று. வீட்டு நிலை மேலும் மோசமாகியது? இதற்குத்தாஞ இவ்வளவு பாடும்! இதற்குத் தாலியை அடகு வைக்காமல் இருந்திருக்கலாம். உண்மை தான்! தாலியின் புனிதத்துவத்தை உணராமல் நடந்து கொண்டவனுக்கு இதுவும் வேண்டும்! இன்னமும் வேண்டும்!

'தாலி! தாலி! தாலி!' சீ! இதை மறக்கவே முடியாதோ? வேலாயுதத்தின் நெஞ்சைச் சாருகவல்லவா அந்த நினைவு பிழிகிறது? அவன் தாலியை மீட்கத்தான்போகிருன்! ஆஞல்- ஆஞல்--செய்தபிழை மறைந்துவிடப் போகிறதா? 'பஞ்சம் போம். பஞ்சத்தில் பட்டவடுப் போகுமா?' அவனது நம்பிக்கைமீது, ஆண்மையின் மீது விழுந்த பயங்கரமான அடியை அவன் எப்படி மறப்பது?

இத்தனைக்கும் காரணம் பொன்னம்மாதானே? அவளை, அவளை!--ஏன் அவளைக் கோபிக்க வேண்டும்? அவள்செய்த

தியாகங்களுக்குப் பரிசா அது?

• வேலாயுதத்தின் கால்கள் தளர்ந்தன. தலையிலிருந்த பாரம் பத்து மடங்காய், இருபது மடங்காய்ப் பெருகுவது போல இருந்தது. மூட்டையை வலது தோளுக்கு மாற்றினான். தோள் சட சடவென்று முறிவது போன்ற உணர்ச்சி; மற்றத் தோளுக்கு மாற்றினான்; முந்தின நிலைதான்! இருந்தாற்போலிருந்து நெஞ்சைக் குடைவது போன்ற வலி ஏற்பட்டு வளர்ந்தது. அடிக்கடி இந்த வலி ஏற்படுவது வழக்கந்தான்! ஆனால் இன்றைக்கோ தாங்கவே முடியவில்லை! அலுப்போடு மூட்டையை இறக்கி வைத்துவிட்டு ஒரு வெளிச்சக் கம்பத்தின் கீழ் உட்கார்ந்தான், அவன்!

வலியினிடையிலும் நினைவுகள் பொன்னம்மாவையே சுற்றிப் படர்ந்தன. அவள் மகா அழுத்தக்காரி! எந்தத் துன்பத்தையும் தன் இதழ்க்கடையிலே சிறை வைத்து, முறுவல் பூப்பதில் அவள் வல்லவள்! நீண்ட பெரிய கண்கள் அவளுக்கு! அந்தக் கண்களையே மூடக்கூடிய நீட்டு நீட்டான இமை மயிர்!

பொன்னம்மா அழுததைத அவன் கண்டதே இல்லை. வேதனைகள் புயலாக வந்து மோதும் போது, தன் இமைக் கதவுகளை மூடி, நெஞ்சைப் பாதுகாத்துக் கொள்ள அவளுக்குத் தெரியும்! அப்படி மூடியிருக்கும் பொழுது உலகத்தின் அழகெல்லாம் அவளுடைய இமை மயிரிலே தூங்கிக்கொண்டிருப்பது போல, ஒரு பிரமை ஏற்படும் வேலாயுதத்திற்கு!

இந்தப் பயங்கரமான அழகும், சுபாவமும் கடைக்குட்டியிலும் அப்படியே படிந்திருக்கின்றன! அதனால்தானே என்னவோ அவனுக்கு அதில் கொள்ளை ஆசை! மற்ற எட்டும் அவனைப்போல வெருளிகள்! சந்தோஷத்தையும், துன்பத்தையும் அப்படியே தங்கள் முகங்களில் எழுதிக் காட்டுவது போலக் காட்டிவிடும்.

என்றாலும் பொன்னம்மா பாவந்தான்! வேலாயுதம் அவளுக்குக் கொடுத்தது வறுமை, துன்பம் என்ற இரண்டையுந் தானே? ஆண்டு தவறினாலும் வீட்டிற்கு ஒரு புதுச்சீவன் வரத் தவறாத நிலையை உண்டாக்கியவன் அவனல்லவா?

பொன்னம்மா தன்கையால் வளர்த்து ஆளாக்கிய, வேலாயுதத்தின் தங்கை சென்றவருஷம் பிள்ளைப்பெற்றபொழுது போட்டியாகப் பொன்னம்மாவும் தாயானாள்! சீ! எவ்வளவு வெட்கமான விஷயம்! வேலாயுதத்தின் வலதுகாற் கட்டைவிரல் நிலத்து மண்ணைக் கீறியது! அவன் அடைந்த வெட்கத்திற்கு அறிகுறி அது!

சிறிதுநேரத்தில் கால்கள் உளைந்தன; எழுந்தான்; சோம்பல் முறித்துக் கொண்டான். இடுப்பில் வலக்கையைவைத்து உடலைவளைத்து இடக்கையை உதறினன். இடுப்பில் படக் என்ற சப்தம்! இடுப்பே முறிந்து விட்டதோ? இருக்காது! ஆனல் இடுப்பில் ஏற்பட்ட வேதனை! அதையும் மீறிய நெஞ்சுவலி! உம்! எப்படியும் வீட்டிற்குப் போய்த்தானே ஆகவேண்டும்?

வேலாயுதம் மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்தபடி தளர் நடை நடந்து சென்று கொண்டிருந்தான்.

அவன் காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு சமயத்திலும் இரண்டு பெரிய அடர்த்தியான இமை மயிரோடு கூடிய, கண்கள் மூடியும் திறந்தும் மாயவித்தை காட்டியபடி அவன் முன்னல் பறந்து கொண்டிருந்தன.

2

பொன்னம்மா: இண்டைக்குத்தான் நான் உனக்கு ஒரு உண்மை சொல்லப் போறன், என்னைக் கோபிக்க மாட்டியே. என்ன, பதில் சொல்ல மாட்டன் எண்ணுறுய்? தலையை ஆட்டுறியா? ஆட்டு: ஆட்டு; இந்த இழவு இருட்டுக்குள்ளை என்ன தெரியப் போகுது"

"உன்ரை தாலியை அடகுவைச்ச நாளிலிருந்து எனக்கு ஒரே வேதனை! மரம்மாதிரி உனக்கு முன்னலை நான் இருந்துகொண்டு, உன்னை அறுதலிக்கோலம் பண்ணினதை நினைக்க--

"ஏன் வாயைப் பொத்துகிருய்? விடு, விடு! இண்டைக்கு நான் என்ரை நிலையைச் சொல்லத்தான் போகிறன். நீயும் கேட்கத்தான் வேணும்."

"வவனியாவிலிருந்து வந்த அண்டையிலிருந்து உன்ரை தாலியை மீட்கிற ஒண்டுதான் என்ரை எண்ணமாய் இருந்தது. அதனலை தான் இந்த மரக்கறி வியாபாரத்தையும் தொடங்கினனன்."

"பஞ்சானுங் குஞ்சுமாய் ஒன்பது சீவனுக்குச் சாப்பாடும் குடுத்து, பத்து ரூபாய் மிச்சமும்பிடிக்கிறது சுகமாய்த் தெரியேல்லை. அதனலைதான் மத்தியானத்தில் சாப்பிடுறதை விட்டுட்டன். மத்தியானத்திலை மரவள்ளிக்கிழங்கு சாப்பிடுறன் எண்டு சொன்னது நினைவிருக்கே! உண்மையிலை நான் ஒண்டுஞ் சாப்பிடேல்லை. அந்தச் சாப்பாட்டுக் காசைத்தான் மிச்சம்பிடிச்சு இண்டைக்கு வருற வழியிலை, கந்தர் வீட்டுக்குப்போய்த் தாலியையும் மீட்டுக் கொண்டு வந்தன்."

"எங்கை உன்ரைமுகம்! அழுகிறியே? ஆ! இல்லை! நீ அழேல்லை! ஆனா ஏன் கண்ணைமூடியிருக்கிருய்! பொன்னு! நீ வேணுமெண்டால் அழு. ஆனல் உன் கணகளைமட்டும் மூடிக்கொள்ளாதே! எனக்குத் தெரியும்; உன்ரை வேதனையெல்லாம் உன்ரை இரண்டுகண்ணிமைக்குள்ளை தான் எண்டு எனக்குத் தெரியும்! சத்தியமாய் உன்ரை அத்தானைக் கண்ணைத்திற திறந்திட்டியே? அது தான் சரி!"

"அப்பாடா! நான் பட்டகடன் இன்டைக்குத்தான் தீந்தது."

"ஆ! இதென்ன! நெஞ்சிலை ஒரேவலி! தாங்கேலல்லை. பொன்னு! பதருமல் போய்க் கொஞ்சச் சுடு தண்ணிவை."

"ஆ! ஐயோ! அம்மா! என்ன செய்யிறது? அ...ம்...மா! அம்...
...மா!"

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. வைகறைப் பெண் வானவீதியிலே சிதறிக்கிடந்த பூக்குப்பையைக் கூட்டித்தள்ளிச் சுத்தம் செய்தாள், கிழக்கு மூலையிலே, நாணச்செம்மை பூத்துநின்ற, காலைக் கன்னியின் கழுத்துக்கூடாய்ச் சூரியன் தலைகாட்டினான்.

பொன்னம்மா கோப்பி வைத்துக் கொண்டு வந்து வேலாயுதத்தைத் தட்டி எழுப்பினாள்.

அவன் எழுந்திருக்க வில்லை; விறைத்துக்கிடந்தான்!

பொன்னம்மாவின் கண்கள் கடலாகவில்லை! நெஞ்சம் எரிமலையாகவில்லை! உடல் மரத்து விறைத்து மரமாக, அவள் மயங்கி விழவில்லை!

அவள் நின்றாள்!

“ஐயோ! தாலியைத் தந்து விட்டு, உங்களை என்னிடமிருந்து பறித்துக்கொண்டீர்களே! பட்டகடனைத் தீர்த்ததாகச் சொல்லி, உள்ள முதலையும் எடுத்துக்கொண்டீர்களே” என்று அழுது கதறி ஆர்ப்பாட்டம் செய்யவில்லை!

அவள் நின்றாள்!

வேதனையின் உச்சியிலே பைத்தியமாகி “ஆஹா! ஊ-ஹூ” என்று சிரித்துப் பாயைச் சுரண்டவில்லை!

அவள் நின்றாள்! தன் பெரிய இமைகளை மூடிக்கொண்டு ஆடாது அசையாது நின்றாள்!

அந்தக் கணத்திலே, மூடிக் கிடந்த அந்த இமைகளின் கருப்பையிலே, ஒரு நவீன தல்ல தங்காள் பிறப்பதற்கான பிரசவவேதனை உண்டாகிக் கொண்டிருந்தது!


# இலங்கைக் கலைக் கழகம்
## தமிழ் நாடக நடனக் குழு
# நாடகப் போட்டி

பரிசு விபரம்:-

முதற் பரிசு ரூ. 500/-
இரண்டாம் பரிசு ரூ. 350/-
மூன்றாவது பரிசு ரூ. 150/-

போட்டி முடிவு திகதி **6-8-60.**

பங்கு பெற விரும்பும் நாடகாசிரியர்கள் போட்டி பற்றிய விதிகட்குக் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்.

கலாநிதி சு. வித்தியானந்தன்
தலைவர்
தமிழ் நாடக நடனக் குழு
இலங்கைக் கலைக் கழகம்
கலா பவனம்
கொழும்பு-7

# என்னுடைய ஆசை

—முருகையன்—

அந்த அறைக் குள்நுழைதல் என்னுடைய ஆசை
அப்பாலே தூண்வரிசை நெடுவழியின் இறுதி
அந்தலையில் இருக்கிறது நெஞ்சகத்துட் கோயில்.
ஆதலினல் எழுதுகிறேன்; சொல், கவிதை சாவி.
அன்பு செய்தல் மற்றுமொரு வழி; ஆனல் அதுவோ
அத்தனைநிச் சயமில்லை; அக்கினி ஒன்றுண்டு.
பின்புறத்தில் பேழை ஒன்றில் சத்தியம் அங்குண்டு.
பேசாமல் சிலவேளை நான் கதவை அணுகின்
காற்றடிக்கும்; தீக்குச்சி அணைந்துவிடும்; திகைப்பேன்
கண்டுகொள்வேன் சிலநேரம் திறப்பதற்குச் சாவி.
போட்டதனைத் திருப்பி இரண்டு டங்குலங்கள் திறக்க
மணியடிக்கும்; அழைப்பார்கள் யாரேனும்—தீ தீ!
கூச்சல்பல கைமறிக்கும் நான் எதுவும் காணேன்.
குதித்திறங்கிப் படிவழியே மீண்டும் இருந்தழுவேன்.

(ஜோன் லெஃமான் எழுதிய கவிதையைப் பின்பற்றியது)

---


# வளருந் தமிழ்

இனமுழக்கம்: (மாத இதழ்) .க.சுப்பிரமணியம், 30, பெரியகடை யாழ்ப்பாணம். விலை: சதம் 10.

தமிழரின் குடியுரிமை, மொழியுரிமை, அரசியல் உரிமை அனைத்தையும் பறித்து அரசியல் அனுதைகளாக ஆட்சியாளர் எம்மை உதாசீனம் செய்யும் இவ்வேளையில் தமிழர்கள் எல்லாரும் ஒன்று திரண்டு உரிமைக்குரல் எழுப்புவதைப் போல "இன முழக்கம்" முழங்குகின்றது. 5-6-60ல் வெளியான இதழில் நியாயவாதி திரு. க. இ.கதிர்காமலிங்கம் B. .A. L.L. B(Hons.) எழுதிய சமஷ்டி அரசியல் விளக்கம் என்றவிஷயம் "சமஷ்டி" என்பதைத் திரித்துக் கூறுபவர்கட்குப் பதில் அளிக்கின்றது.

இவ்வரசியல் பத்திரிகை நீடுவாழட்டும் என வாழ்த்துகின்ருேம்.

-கண்ணுத்துரை.





**இயற்கையிலிருந்தே செயற்கை பிறக்கின்றது. ஓவியக்கலையின் வளர்ச்சி எவ்வாறு இயற்கையுடன் இணைந்திருக்கின்றது என்பதைத் தெளிவாக விளக்குகின்றார் ஆசிரியர். காத்தற் கடவுளை ஏன் கார்வண்ணனாக வரைகின்றோம்? டார்வினின் பரிணாமக் கொள்கையிலும் பார்க்க, நமது "தாசாவதாரம்" எவ்வகையில் சிறந்தது? ஓவியக்கலையின் வளர்ச்சி மட்டுமல்ல, இந்துமத தத்துவங்களே விளக்கப்படுகின்றன.**

மனிதன் பிறக்கிறான், வாழ்கிறான், மறைந்துவிடுகிறான். மனிதன் பிறக்கும்பொழுது தன்னுடன் எதையும் கொண்டுவருவதில்லை, இறக்கும்பொழுது தான் கொண்டுவந்த உடலையும் விட்டுவிட்டுப் போய்விடுகிறான். பிறப்பு இறப்பாகிய இரு துருவங்களுக்குமிடையில் சுழலும் வாழ்க்கைச் சுழலில் சிக்குகிறான். சிக்கிய ஒருவன் சுழலுடன் செல்கின்றான். மற்றொருவன் சுழலில் அகப்பட்டும் அவ்விடத்தைவிட்டு அகலாது அமிழ்ந்து மடிகின்றான். சுழலுடன் சென்றவன் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப பலசிரம பரிகாரம் எடுக்க வேண்டியவனாய் இருக்கின்றான். இப்படியான நிலையைத்தான் கலாச்சாரம் எனக் கூறுகிறோம். சுழலில் அகப்பட்டு அசையாது மடிந்தவன் என்பதும் நாகரீக வளர்ச்சியில்லாதவர்களைக் குறிக்கும். மற்றவன் நாகரீக வள்ர்ச்சியடைந்த சமூகமாக எண்ணப்படும்.

இப்படி நாகரீக மடைந்து கொண்டு வருபவன் எண்ணத்துணிகிறான். உள்ளக்கிளர்ச்சியை அபினயமூலம் மற்றவர்களுக்கு உணர்த்துகிறான். பின் பேச முற்படுகிறான். ஒலிவடிவுக்கு வரிவடிவை அமைக்கப் பார்க்கிறான். இப்படி மனிதனின் உள்ளத்திலிருந்து எழுந்த உணர்வு வேகமானது உந்தித்தள்ள அவன் தனக்கருகேயுள்ள பொருட்களில் அடையாளங்களை உண்டாக்க எத்தனிக்கிறான். இவையே பின்பு சித்திரங்களாகவும் சிற்பங்களாகவும் உருவெடுத்து விடுகின்றன. இதுவே கலையின் பிறப்பிடமாகும்.

நாங்கள் ஆதிகால, அதாவது சரித்திரகாலத்திற்கு முற்பட்ட மனிதனின் பழக்கவழக்கங்களை அவன் விட்டுச்சென்ற கலை எச்சங்கள் மூலமாகவே அறிகின்றோம். ஆதிகால மனிதனுள் கலையார்வமும் இரசிகத் தன்மையும் இருந்தமையினாலேயே அவர்கள் தாம் வசித்த இயற்கைக் குகைகளிலும் அழகு இருப்பதைக் கண்டார்கள். உட்புறங்களை அழகுபடுத்த சித்திரங்களை வரைந்தார்கள்.

அவை இன்றும் அழியா ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன. இவைகளில் மிகப்பழமை வாய்ந்த குகைச் சித்திரங்கள் ஸ்பானியாவிலுள்ள அல்ராமிரு (Altamira) கோகுல் (Cogul) என்னும் இடங்களில் காணப்படுகின்றன. இங்குள்ள மிருகங்களின் உருவச்சித்திரம் பெயர் பெற்றவை எனக்குறிப்பிடத்தக்கது. இதேபோல் வட ஆபிரிக்காவிலுள்ள குகைகளிலும் சித்திரங்கள் காணப்படுகின்றன. இவர்கள் தங்கள் சித்திரங்களைத் தீட்டுவதற்கு மண்ணிலிருந்து எடுக்கப்படும் வர்ணங்களுக்கு மிருகத்தின் கொழுப்புகளைச் சேர்த்துத் தீட்டியிருக்கிறார்கள். ஸ்பானியாதேசத்தில் ஓறிஞேசியன் (Aurignacian) காலத்தில் (கி. மு. 20, 000 பழைய கற்காலம்)வரையப்பட்ட பிசன் (Bison) மிகப்பிரசித்திவாய்ந்தது. இது உண்மையான பிசனின் (குழுமாடு போன்றது) குணத்தை அப்படியே பிரதிபலிக்கின்றது. அதில் அனேகமாக புற உருவத்தைவிட அதன் குணங்களே உருவமாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றது.



இவைபோன்று கிழக்கு நாடாகிய இந்தியா போன்ற தேசங்களிலும் குடைவரைச்சித்திரங்கள் உள்ளன. ஆனால் அவை பிற்காலத்தவை அதாவது புதியகற்காலம் எனக் கூறுகிறார்கள். இவற்றில் மத்திய இந்தியாவிலிருக்கும் “கைமூர்மலை”த் தொடரில் காணப்படும் வேட்டைக் காட்சிமிகப்பழமை வாய்ந்ததாகும். மேலும் “விந்தியமலை”யிலும் இப்படியான சித்திரங்களுடன் வர்ணங்களை அரைக்கும் அம்மி குழைக்கும் தட்டுப் போன்றவைகளும் கண்டுபிடிக்கப்பட்டன “மாண்டு” நதிக்கருகாமையிலுள்ள மலையில் கலைமான் யானை முயல்போன்ற மிருகங்களும், ஒரு பிசனை வேட்டையாடும் காட்சி ஒன்றும் சிறந்த முறையில் வரையப்பட்டிருக்கிறது. இதில் எருமை மாட்டை வேட்டையாடும் காட்சி ஒன்றும் வரையப்பட்டிருக்கிறது. இன்றும் “றைகா” மிர்சார்ப்பூர் (Raigarh and Mirzapur) குகைகள் இந்தியக் கலையின் பிறப்பிடமாய் அமைந்துள்ளது. இவற்றின் பின்பே “அஜந்தா” சித்திரங்கள் வரையப்பட்டன. அஜாந்தா சித்திரங்கள் வரையப்பட்டன, அஜந்தா சித்திரங்கள் கி. பி. 50க்கும் கி. பி. 628க்கும் இடைப்பட்ட காலத்தில் வரையப்பட்டன. இக்குடைவரைச் சித்திரத் தொடர்பில் மிகப் பிந்தியது இதுவேயாகும், இப்படிக் கால வரையறித்து புவியியல் ஆராச்சியாளர் கூறுகிறார்கள். இதுஎத்தனை யுண்மையோ நாமறியோம்.

குகைகளில் வசித்தவர்கள் சித்திரத்துடன் நிற்கவில்லை. இயற்கைக் குகைகளைப்போல் செயற்கைக் குகைகளை செய்ய வேண்டும் என எண்ணலானார். இந்த ஆர்வம் வரைகளைக் குடையவேண்டும் என ஊக்குவித்தது. பின் தகட்டுக்கற்பாறை கொண்டு குகையுண்டாக்கினர். இச் செயலே வளர்ந்துகட்டடக்கலை (Architecture) என வந்தது எனலாம்.

இவற்றை எண்ணும் போது மனிதன் வெகுகாலத்திற்கு முன்பே நாகரீக

மடைந்துள்ளான் என எண்ணக் கூடியதாகிறது. ஆனல் இடையிடையே இயற்கையின் கோளாறுகளினல் மனித இனம் சிதைந்தும் சிதறியும் பெருகியும் பலவாருகப் போயிற்று. இதனுலேயே கலை கலாச்சாரம் முதலியவற்றில் ஆதிகாலத்தில் ஒற்றுமையும் இடையே மிக வேற்றுமையும் அடைந்திருப்பதை காணக் கிடக்கிறது.

* * * *

மனிதன் குகையினின்றும் விடுபட்டு வெளியுலகத்தை காணுகிருன். அப்போது அவனுடைய இரசிகத் தன்மையானது சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்குகிறது. இவ்வொளியில் அவனுக்கு இயற்கை அன்னையில் எழில் கிட்டுகிறது. கருநீலத் திரைக்கடலும் அதைக் கவிந்திருக்கும் நீலவானமும் இவ்விரண்டிற்குமிடையே உதயமாகும் சூரியன், சூரியனின் ஒளியிலுள்ள வர்ணச் சேர்க்கையைப்பிரித்துத் தனித்தனியே நமக்களிக்கும் தாவரங்கள், ஆதியான ஆதவனின் கரம் பட்டு அகம் மலரும் கமலங்கள், அவற்றில் ஆலித்துணலும் கார் வண்டுகள் அவற்றைப் பிடிக்கும் எண்ணங்கொண்டு தாமரையிலையில் தவழும் மண்டுகம்; குமரனும் சூரியனைக் கண்டு தலை குனிந்த பருவமங்கையராம் கதிருடைய பயிரினங்கள்; இப்படியான "கைபுனைந்து இயற்ரு கவின் பெறு வனப்பு" அவன் கண்களுக்கு விருந்தாகின.

உள்ளத்தில் உணர்வு அறிவுச் சுடரைத் தூண்டியது. ஆதித்தன் எனச் சூரியனை அழைத்தான். தன் கற்பனையில் தோன்றிய இனைஞகை, இறைவனுக ஆதிக்கடவுளாக அவனன்றி இவ்வுலகில் அணுவும் அசையாது என்ற உண்மையை அறிந்து அவனுக்கு உருவங்களைக் கொடுத்தான். இயற்கையே உலகிலுள்ள உயிரினங்களிண் தந்தை தாய் என்று உறுதியாக நம்பி அவைக்குப்பணிந்து அஞ்சலி செய்தான். இவ்வெண்ணம் உலகெங்கும் ஆதியில் ஒரேதன்மையதாய் அமைந்திருந்தது. எனினும் மேலைநாட்டவரிலும் பார்க்க கீழ் நாட்டவர்களே இவ் ஆத்மீகவாழ்வில் அதிகம் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. கீழைத்தேயத்தவர் பிரதானமாக இந்தியர் சூரியனை "பிரமா" எனவும் "சிவன்" எனவும் "முருகன்" எனவும் உருவகம் செய்தனர். நீரை "விஷ்ணு," "திருமால்" என அழைத்தார்கள். கார் நிறத்தோன் காக்கும் கடவுள் என எண்ணினர். இப்படி எண்ணியதில் வியப்பொன்றுமில்லை, என விஞ்ஞானம் வரையறுக்கிறது, எப்படி என சிறிது சிந்திப்போம். சூரியன் இல்லாது உலகில் புல் பூண்டு முதல் மரம்வரை, எறும்பு முதல் எறும்பிவரை ஓர் உயிரினமும் தோன்றியிருக்கமாட்டா. இந்நிலையில் சூரியன் படைத்தலைச் செய்கிருன், உஷ்ணமின்றேல் உயிர் வாழவும் மாட்டாஇப்போ காத்தலைச் செய்கின்ருன். இவனுடைய கதிர்களில் எரிகதிர்கள் (Cosmic Rays) அல்லது தீயாகும் பொழுது உருத்திரனுகி அழிக்கிருன்.

இதுநிற்க நீர், கார்மேகம் என்பவற்றை காக்கும் கடவுள் எனவும் சீவராசிகள் தோன்றவும் உதவியாய் இருக்கின்றபடியால் திருமால் எனவும் எண்ணி வழிபட்டனர். விஞ்ஞான ரீதியில் அதாவது பரிமணுக் கொள்கையில் (1) அமீபா என்னும் ஓர் நுண்ணறையுடைய உயிரினந்தான் நீரில் முதன்முறை தோன்றியதாகும் என நம்புகின்றனர். இப்படித்தோன்றிய உயிரினம் வளர்ந்து உருவமாறுபாடடைந்துமீன் போன்று நீரில் சீவித்து; (2) கால் முளைத்து நீரிலும் நிலத்திலும் சஞ்சரித்து; (3) பின் நிலத்தில் மாத்திரம் நாலுகால் பிரயாணியாகச் சீவித்து; (4) நாலுகால் பிராணி இரண்டு காலில் நடக்கக்கூடிய (பறவையாகி) குரங்காகி; (5) குரங்கு மனிதன் தோன்றி (6)

மனிதன் தோன்றினுன் என்று "டார்வின்" கூறியிருப்பது உலக றிந்ததே. இது. கி. மு. 400ல் வேறு அறிஞர்களாலும் கூறப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனல் எங்கள் "திருமால் அவதாரம் பத்து" என்பதை ஏற்றுக்கொள்ள எங்கள் அறிவுப்புரட்சி நடாத்தும் பேரறிஞர் முன்வரமாட்டார். இவற்றைக் கலைக் கண் கொண்டு நோக்குவோம்.

நீரே (நீர்) திருமால் என எண்ணுவோமாயின் (1) திருமால் மச்சம் (அமீபா) ஆனுர்; (2) நிலத்திலும் நீரிலும் சங்கரிக்கக் கூடிய பிராணியாகிய கூர்மம் (ஆமை) ஆனுர்; (3) நிலத்தில் மாத்திரம் சஞ்சரிக்கக் கூடிய (பன்றி) வராகமானுர்; (4) இரண்டுகாலால் நடக்கக்கூடிய நரசிம்மமானுர். இங்கு ஓர் விசேடம் இருக்கிறது. டார்வின் குரங்கு என்ருர். ஆனுல் நம்மவர் நரசிங்கம் என்ருர். மனிதனுடைய முகத்திற்கும். குரங்கு, சிங்கம், என்பவற்றின் முகத்திற்கும் ஒற்றுமையுண்டு தோற்றத்தில். அதிலும் மனிதச் சிங்கம் என்ருல் அல்லது சிங்கமனிதன் என்ருல் மனிதனுக்குக் கிட்டிய தொடர்புடையது என்றே சொல்ல வேண்டும். ஆனுல் குணத்தில் வீரமும், நேர்மையும், உறுதியும் வலிமையும் ஒருங்கே அமையப்பெற்றது சிங்கம். எனவே வீரபரம்பரை எனக் கூறுவதற்காக ஒருவேளை கூறியும் இருக்கலாம். குரங்குக்குப்பின் மனிதனுடன் "டார்வின்" நிறுத்திவிட்டார். ஆனுல் அத்துடன் நம்மவர் நிறுத்தவில்லை. ஆதிமனிதனின் பண்பிலிருந்து நிகழ்கால மனிதரின் பண்புடன் நிற்காது எதிர்கால மனிதரின் பண்புவரை விபரமாய்க் கூறியுள்ளனர்.

எப்படி என்பதை ஆராயின் ஒவ்வோர் உண்மைகளையும் ஒவ்வோர் கதைகளாக்கி எல்லோர் மனதிலும் பதியும்படி அருந்தொண்டாற்றியிருக்கின்றனர்.

அடுத்து (5) வாமனன் அவதாரத்தைப் பார்ப்போம். இது நிமிர்ந்து நடக்காத மனிதன் என்பதைக் குறிக்கும் இது இப்போ கண்டுபிடிக்கப்பட்ட யாவகத்தின் குரங்கின் எலும்பை ஞாபகமூட்டுகிறது. அதனுடன் பனிமனிதனுடைய ஞாபகத்தையும் கொண்டு வருகிறது.

(6) பரசுராமன்:- இவ்வவதாரத்தைப்பற்றி அதிகம் கூறத்தேவையில்லை. முரட்டுத்தைரியம் மனஉறுதி முன்பின் யோசியாது செய்தல் போன்றதாகும்.

(7) இராமன்:- உண்மையான வீரம், மற்றவர் சொல்லுக்குக் கீழ்ப்படிதல் முதலியன.

(8) பலபத்திரன்:- இவரும் ஏறக்குறைய முன்னவரின் பண்பாட்டையே உடையவர்.

(9) ஆனுல் வருகிருன் கண்ணன் அவதாரம். ஐயகோ பாரதத்தை வாசித்தாலல்லவோ தெரியும். யாரை குட்டிச் சுவராக்கவேண்டுமோ அவரையெல்லாம் தந்திரமாய் மாழவைத்து காக்கவேண்டியவர்களைக் காத்து சூழ்ச்சிகள் பல செய்து சூதர்களை அழித்து கபடநாடகசூத்திரதாரி எனப்பெயர் பெற்றவரல்லவா? இவ்அவதாரம் இக்கால மனிதரின் பண்பைஎடுத்துக் காட்டுகிறதல்லவா? நாமெல்லாம் கண்ணன் அவதாரமே தான். ஏன்? எங்களில் கண்ணனின் பண்புகள் எல்லாம் உண்டல்லவா? இப்படியான குணமுள்ளவர்கள் இவ்வுலகிலே பிறப்பார்கள் என்று எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் நமது மூடக்கொள்கையுடைய மூதாதையர் (மன்னிக்கவும் இப்படி நான் சொல்லவில்லை அறிவுப்புரட்சிவாதிகள் மூதாதையரை இப்படித் திட்டுகிருர்கள்) கூறியிருக்கிருர்கள். நீரானது இப்படியாக அவதாரம் எடுத்து வந்திருப்பதை நம்புவோமாயின் (10) "கற்றி" அவதாரம் நம்மிடையே நிச்சயமாய்த் தோன்றி சத்தியத்தை நிலைநாட்ட இடமிருக்கிறதல்லவா?...

—தொடரும்—

வளருந் தமிழ்.

# பாரதத் தூதுவர்.

இது மகா பாரதத்திலுள்ள தூதுக்களுள் முக்கியமான தூதாகிய கிருஷ்ணன் தூதை விரித்து ஓரளவு ஆராய்கிறது. இதற்காதாரமான தூது இலக்கியங்களின் வகை, அஃறிணைப் பொருளான சடப்பொருள்கள் (மேகம்) இயங்கியற் பொருள் (அன்னம், நாரை) களின் தூது, மனிதர்களின் தூது, தேவர்களின் தூது, கிருஷ்ணன் தூதுக்கு முற்பட்ட சம்பவங்கள் என்பவற்றை இந்நூலின் முதற்கட்டுரை கூறுகின்றது. இவைகள் கிருஷ்ணன் தூதை நன்கு விளங்குவதற்கு உதவி புரிகின்றன. இக்கட்டுரையில் (பக். 3ல்) ''வண்டையும் கிளியையும் தூதுவராகப் பாவனை பண்ணி எழுதப்பட்ட நூல்கள் இச்செய்தியை இன்னாரிடம் கூறு, என்பதனோடு முற்றுப்பெறுகின்றன. தூதுசென்ற வண்டோ, கிளியோ திரும்பிவந்து சென்ற இடத்தில் நிகழ்ந்தவற்றை கூறும் பாகம் இந்நூலிற் காணப்படுவதில்லை என்று கூறும்பகுதிச் சம்பவம் நள வெண்பா— அன்னத்துடன் எவ்வளவுக்குப் பொருந்துமென்பது ஆராயத்தக்கது.

ஆக்கம்: கி. லக்ஷ்மணன் எம். ஏ.

வெளியீடு: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. 5.

விலை: ரூ. 1-25.

திறனாய்வு: வ. நடராஜன்

பாண்டவர்கள் முதலில் உலூகனைத்தூதனுப்பி மறுபடியும் கிருஷ்ணனைத் தூதனுப்புவது எவ்விதம் பொருந்துகிறது அது எவ்வாறுஅவசியமாகிறது என்பவற்றை 2ம் கட்டுரை விளக்குகிறது. மூன்றுவது கட்டுரையில் கிருஷ்ணன் தூது பற்றி பாண்டவர்களை மூன்று கட்சிகளாக வகுக்கிறுர் நூலாசிரியர். தருமன் ஒரு கட்சி, சகாதேவன் தவிர்ந்த மூவரும் இன்னெரு கட்சி, சகாதேவனே மூன்றுவது கட்சி போலும்.

வீமன் முதலிய மூவரது அபிப்பிராய ஒற்றுமைகளும். அவற்றுள் வீமனது கூற்றிலுள்ள சில சிறப்பு அம்சங்களும் வீமனது பணிவுணர்ச்சி மேம்பாடும் இக்கட்டுரையிற் கூறப்பட்டுள்ளது.

நான்காவது கட்டுரையில் பாண்டவ கௌரவப் போர் முழ்வதற்குக் கண்ணன்செய்த பல சூழ்ச்சிகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. துரியோதனன் மாளிகைக்குச் செல்லாது விதுரனில்லில் கண்ணன் தங்கியமையே கண்ணனது முதற் சூழ்ச்சி என விளக்கியுள்ளார் ஆசிரியர். இது வரவேற்கக் கூடிய அம்சம். கண்ணனுடைய உண்மையான எண்ணத்தை முடிப்பதற்கு இதனையே முதலாயுதமாகக் கொண்டான் கண்ணன். ஆயினும் அதற்குத் தக்கதொரு நடுவு நிலையிலிருந்து மாருத காரணமும் உண்டு என்றே கூறவேண்டும். அது "நின்னில்" இன்னடி சிலுண்டு நின்னுடன் வெறுக்க வெண்ணுவது நீதியோ" என்பது. அதற்கு உன்னுடைய வீட்டில் உனது இனிய உணவையுண்டு விட்டு நீ சொல்லுவதை மறுப்பது அழகாகாது. அதனுல் நான்யாருக்குத் தூது வந்தேனே அவர்கள் அபிப்பிராயத்தோடு உன் அபிப்பிராயம் மாறுபடநேரின் எனது கடமையை செய்தவனுகேன். அதனையே "நின்னுடன் வெறுக்க வெண்ணுவது நீதியோ" எனக் கண்ணன் கூறினுன் எனப் பொருந்தும் அதற்கு 'துரியோதனனை தான் வெறுக்க வெண்ணியிருப்பதையே' கண்ணன் அவ்வாறு கூறினுன் என நூலாசிரியர் கூறியுள்ளார்.

இறுதிக் கட்டுரையாகிய ஐந்தாவது கட்டுரையில் சில பாத்திரங்களை நூலாசிரியர் ஆராய்கிறுர். அவற்றுள் சகாதேவனை மிக நன்றுக ஆராய்ந்துள்ளார் ஆசிரியர். அவ்வாராய்ச்சியில் சகாதேவனுடைய பதில்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகிறதாக ஆசிரியராற் காட்டப்பட்டுள்ளது. ''நீ தூது சென்றுலென் ஒழிந்தாலென்" என்ற பாடல் முலம் 'குறித்த செய்கை அந்தத்தின்முடியும் வகை அடியேற்குத் தெரியுமோ" என, தத்தவஞானிபோல தான் ஒன்றையும் அறியாததுபோற் கூறி, பின் ''ஒருவருக்குந் தெரியாது உன்மாயை யானறிவேன் உண்மையாக" என எல்லாம் அறிந்ததாகக் கூறுவதே ஆசிரியர் முரண்பாட்டிற்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகின்றுர். இச்செய்யுள்கள் முரண்படுகின்றன எனக்கூறுது இவ்விரு செய்யுள்களும் முரண்பாடற்றன எனப் பின் வருமாறு கூறுவது பொருந்துமா என்பது ஆராயத்தக்கது.

சிந்தித்தபடி நீயுஞ்சென்றாலென் ஒழிந்தாலென் செறிந்த நூறு
மைந்தர்க்குள் முதல்வனிலம் வழங்காமலிருந்தாலென் வழங்கினாலென்
கொந்துற்ற குழலிவளும் முடித்தாலென் விரித்தாலென், குறித்த [செய்கை
அந்தத்தின் முடியும் வகை அடியேற்குத் தெரியுமோ ஆதி மூர்த்தி

என்னும் செய்யுளுக்கு, சிந்தித்தபடி நீ துரியோதனனிடம் தூதாகச் செல்வாய்; நூறுமைந்தர்க்குள் முதல்வனாகிய துரியோதனன் நிலம் வழங்கான்; எனவே போர்நிகழ திரௌபதை கூந்தல் முடிப்பாள். அஃதாவது துரியோதனனாதியோர் மடிவர் எனக்கூறினான் எனப் பொருள்கூறல் பொருந்தும் எங்கள்மெனில், நான்காவது அடியின் முதற்பகுதி 'அந்தத்தின் முடியும்' என்பது அதனை 'அந்தத்து சக இல்சக முடியும்" எனமுடித்து "அந்தத்து" என்பதற்கு இறுதியானது (அந்தத்தது) என்று பொருள் கூறி 'இறுதியானது இன்றி முதலானவையே முடியும்! என முடிவு செய்யின், ஒவ்வொரு சோடியிலும் "சிந்தித்தபடி செய்தல், ஒழிதல்," முதல்வனிலம் வழங்காமலிருத்தல் வழங்கல், குழல் முடித்தல் விரித்தல் (இறுதியானவையின்றி) முதலிலுள்ளவை கீறிடப்பட்டவை முடியும் எனக் கூறலாம். இங்ஙனம் கூறின் முரண்பாடு தோன்றாது.

இந்நூல் பல்கலைக் கழகப் புகுமுகவகுப்பு மாணவர்க்கு மிக உதவி புரியக்கூடியது என்பது ஒருதலை. இதனை அதற்கேற்றவிதமாக வெளியிட்ட ஆசிரியர் பாராட்டப்பட வேண்டியவர்.


தமிழ் நாட்டில் தயாராகும்

மில்க் வைட்

நீல சோப்

என்று கேட்டு வாங்குங்கள்


தயாரிப்பாளர்கள் :

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொடர் கதை:

# உனக்காக கண்ணே!




உங்கள் நினைவிற்கு:

மட்டக்களப்பு பாரதி கல்லூரியின் ஆசிரியர் சண்முகம் பீ. ஏ. சாவித்திரி என்ற சக ஆசிரியையுடன் நெருங்கிப் பழகுகின்றான். அவர்கள் தொடர்பில் யாரோ களங்கம் கற்பித்துவிடுகின்றார்கள் என்ற செய்தியை ஆசிரியர் பத்மநாதன் மூலம் அறிந்ததும், பயந்து கல்லூரியை விட்டுப் புறப்பட்டுக் கொழும்பை அடைகின்றான். பரமேஸ்வரன்—ரூபமதி ஆகியோரின் தொடர்பு அவனைப் புதிய மனிதனாக்குகின்றது. மட்டக்களப்பிற்குத் திரும்பிச்சென்று சாவித்திரியுடன் மனம் விட்டுப் பேசுகின்றான். ஊரில் தந்தை இறந்ததால்ஏற்பட்டகடன்பிரச்சினையையும் கல்யாணப் பிரச்சினையையும், தன் சொந்த வீட்டை விற்பதன் மூலம் தீர்க்கின்றான். அவனுடைய கவலை தீர்க்கும் மருந்தாகிய சாவித்திரியுடன் மனம் கலந்து பேசிக்கொண்டிருந்தபோது, யாரோ வெளிக்கதவில் தட்டிவிட்டு, இருளில் மறைகின்றனர். அடுத்தநாள், சாவித்திரி மாசுடையவள் என்ற செய்தியைத் தாங்கிய அநாமதேயக் கடிதம் ஒன்று சண்முகத்திற்கு கிடைக்கின்றது. அந்தச் செய்தியை ருசுப்படுத்தும் வகையில் சாவித்திரி பேசியது, சண்முகத்தின் ஆத்திரத்தை தூண்டுருந்தே ஓடுகிறான். கொழும்பில் ஒரு தனியறையில் இருந்து நடந்த நிகழ்ச்சிகளைக் கதையாக எழுதுகின்றான். கதை வெளியான பத்திரிகையின் ஆசிரியர் நேரில் வந்து அவனைப் பாராட்டுகின்றார். பத்திரிகையில் தொடர்ந்து எழுத ஒப்புக்கொள்கின்றான். பரமேஸ்வரனின் கண்ணில் கூடப்படாது மறைந்து வாழ்ந்த சண்முகத்தின் கண்களில் திருமண அழைப்பிதழ் ஒன்று சிக்குகின்றது. அவன் மனம் குழம்புகின்றது. இனி, மேலே படியுங்கள்.

## 12. புதுமணத் தம்பதிகள்:

அந்தத் திருமண விளம்பரத்தை இரண்டு, மூன்று தடவை படித்தான் சண்முகம். தாய் தந்தையர் பெயர். முகவரி, மணமக்களைப்பற்றிய விபரங்கள் — எல்லாமே சரியாகத்தான் இருந்தன. சந்தேகமில்லை. மணமகன், அவனுடைய பால்ய நண்பன் பரமேஸ்வரன். மணமகள், ரூபவதி. அவர்களுடைய திருமண வைபவத்தில் கலந்து கொண்டு, மணமக்களை ஆசீர்வதிக் கேட்குமாறு நண்பர்களுக்

கும் உற்றார் உறவினர்கட்கும் அழைப்பு விடுத்திருந்தனர் ஆறுமுகமும் பாரியாரும்.

சண்முகம் நெடுமூச்செறிந்தான். 'காலம் காலமாகக் கட்டியெழுப்பிய காதல் மாளிகையினுள் குடிபுகப் போகின்றார்கள் அவர்கள். அவர்களுக்கிடையே இருந்த களங்கமற்ற அன்பு, காதலாக மலர்ந்து, விரைவில் கனி கொடுக்கப் போகின்றது. வாழ்க்கையெனும் ஓடத்தில் ஏறி, காதலெனும் கைத்துடுப்பைக் கொண்டு, இன்பச் சமுத்திரத்தில் இணைபிரியாது உலாவப் போகின்றார்கள். அன்றும், இன்றும், இனி என்றுமே அவர்களுக்கு இன்பம்தான். துன்பம் தலை நீட்டினாலும் அதைத் துடைத்தெறியும் சக்தி அவர்கள் இருவருக்குமே உண்டு. கவலையே இல்லாத காதற்சோடிகள் ...... ஆனால் நான் ......?

சண்முகத்தின் மனத்திரையில் பரமேஸ்வரனும் ரூபமதியும் புதுமணத் தம்பதிகளாய் நிற்கும் அழகுக் காட்சி தோன்றியது.

ஆடம்பரமான கல்யாணம். அவர்களுடைய திருமணத்திற்காக ஊரே விழாக்கோலம் பூண்டதைப் போல காணப்படுகின்றது. சுற்றிச் சுழன்று பறந்து திரியும் வண்ணத்துப் பூச்சிகளைப்போல் நகரத்து நாரீமணிகளும் கிராமத்து அழகிகளும் அந்தக் கல்யாணத்திற்கு மெருகூட்டுகின்றனர். நண்பர்களும் உறவினர்களும் [illegible] களைச் சொரிகின்றனர். பரிசுப் பொருட்கள் மலைபோல் குவிகின்றன. ஆனால், இவை எதையுமே சட்டை செய்யாது, தமக்கென ஓர் உல்லாச உலகத்தைச் சிருஷ்டி செய்துகொண்டு உள்ள நிறைவுடன் உரையாடிக்கொண்டிருக்கின்றனர் பரமேஸ்வரனும் ரூபமதியும். சண்முகம் அவர்களருகே செல்கின்றான். மகிழ்ச்சிப் புன்னகையுடன் அவனை வரவேற்கின்றார்கள். அப்பொழுது அவர்கள் இருவரது முகங்களிலும் சண்முகம் கண்ட உணர்ச்சி பாவம்! ஆஹா! அதை எழுத்தில் வடிக்க முடியாது; சித்திரத்தில் தீட்ட முடியாது. நேரில் பார்த்து நெஞ்சில் உணர்ந்து அனுபவித்து ஆனந்தப் படவேண்டும். 'இவள் என மனைவி இவர் என் கணவர்' என்ற உள் உணர்ச்சியால் ஏற்பட்ட உவகைப் பெருக்கு, பெருமைப் பொலிவு அந்த அன்பு முகங்களில் அழகுத் தாண்டவம் புரிந்தது. கண்களில் துளிர்த்த நீரை மறைப்பதற்காகக் குனிந்து கொள்கிறான் சண்முகம். அங்கே காட்சி தருகின்றாள் சாவித்திரி. சூழ்ச்சி, வஞ்சனை, நம்பிக்கைத்துரோகம், அடங்காப்பிடாரித்தனம், அவலட்சணம்—எல்லாம் ஒன்று திரண்டு ஒருருவமாகி சாவித்திரியின் உருவில் நிற்கின்றன. சீ...! அருவருப்புடன் தன் முகத்தைச் சுளித்துக் கொள்கிறான் சண்முகம்.

அதற்குப் பின் கற்பனைத் [illegible]

அதிலே இப்போது யாருமே இல்லே, ஒரே சூனியம்.

ஆடாமல், அசையாமல் எதையோ சிந்தித்தபடி சிறிது நேரம் இருந்தான் சண்முகம்.

மனிதனுக்கு மனேவி மிக மிக இன்றியமையாதவள். ஒருவனுடைய வாழ்வின் போக்கை, இலட்சியத்தின் நிறைவை திறமையின். வெற்றியை நிர்ணயிப்பவள் அவனுடைய மனேவி தான். காந்தியை மகாத்மா ஆக்கியது கஸ்தூரிபாயின் தன்னலமற்றதொண்டு. கஸ்தூரிபாயை விட, வேறு யாராவது சுயநலப் பிசாசு காந்தியடிகளுக்கு மனேவியாக வாய்த்திருந்தால், இன்று காந்திஜியின் பெயரையே நாம் உச்சரிக்கமாட்டோம். நேருவைத் தேசியவீரனுக்கியது கமலாவின் அன்புப் பணிவிடைகள் தான். இப்படியான ஒருத்திதான் எனக்கு மனேவியாக வாய்க்கவேண்டும் என்று மனதார விரும்பினேன். என் விருப்பு வெறுப்புகளுக்கு விட்டுக் கொடுத்து, என் இதயத்தை தன் இதயத்தால் பிணேத்து, என் வாழ்க்கை வெற்றியடைய, என் இலட்சியம் நிறைவேற என்னுடன் இணேந்து வாழ்வாள் ஒரு எழிலரசி என்று கனவு கண்டேன், கற்பனே செய்தேன். என் கனவுக் கன்னி சாவித்திரியாகத் தான் இருப்பாள் என நம்பினேன். அந்த அற்புதக் கனவெல்லாம் இன்று சிதைந்து சின்னுபின்னமாய் விட்டன. என் நம்பிக்கை எல்லாவற்றையும் நாசமாக்கி விட்டாய் சாவித்திரி! நாசமாக்கிவிட்டாய்!

அலுவலகத்து மேசையின் மேல் தலேயைப் பதித்துக் கொண்டு அழுதான். பரமேஸ்வரனும் ரூபமதியும் ஒன்று சேர வேண்டும்; அதைப்போல் தானும் சாவித்திரியும் ஒன்று சேரவேண்டும என்று அவன் கண்ட கனவில் பாதிக்கனவு தான் நிறைவேறப் போகின்றது! அவனுக்கு இனி வாழ்வே இல்லே, மனம் உடைந்துவிட்டது. அந்த ஆற்றுமை அவன் துக்கத்தை அதிகரித்தது. அது பத்திரிகை அலுவலகம் என்பதை மறந்து, பொதுமக்கள் அடிக்கடி வந்துபோகும் இடம் என்பதை மறந்து, தான் இருபத்தைந்து வயது நிரம்பிய இளேஞன் என்பதையும் மறந்து அவன் விம்மி விம்மி அழுதான்.

தற்செயலாக அங்கு வந்த பையன் ஒருவன் சண்முகத்தின் நிலேயைப் பற்றி அலுவலகத்திலுள்ளோர் எல்லோருக்கும் சொல்லிவிட்டான். சிறிது நேரத்தில், ஆசிரியர், உதவி ஆசிரியர்கள், பத்திரிகை முதலாளி, அச்சுக் கோர்ப்பவர்கள், சில்லறை வேலே செய்பவர்கள்—எல்லாரும் சண்முகத்தின் அறைக்கு வந்துவிட்டார்கள். சண்முகத்தின் நிலே ஒரு புறம் ஆச்சரியத்தையும், இன்னெரு புறம் பரிதாபத்தையும் ஏற்படுத்தியது.

ஆசிரியர் அவனருகே சென்றார். "இதென்ன மிஸ்டர் சண்முகம்! ஏன் அழுகின்றீர்கள்? ஏதாவது துக்கச்செய்தி வந்ததா?" பரிவோடு கேட்டார் ஆசிரியர்.

அப்போதுதான் தலையை நிமிர்த்திப் பார்த்தான் சண்முகம். 'அலுவலகத்திலுள்ள இத்தனை பேரும் ஏன் என்னைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு நிற்கின்றார்கள்? ஏன் என்னையே முறைத்துப் பார்த்தபடி நிற்கின்றார்கள்?'

கனவுமற்ற நனவுமற்ற ஒரு இடை நிலையில் இருந்து, தன் சோகமெல்லாம் கரையட்டு மென்று கண்ணீர் வடித்த சண்முகத்திற்கு எதுவுமே புரியவில்லை.

ஒன்றுமே பேசாது அவர்களை வெறித்துப் பார்த்தபடி இருந்தான்.

"நாங்களெல்லாம் ரொம்பப் பயந்துவிட்டோம் ஸார். உங்களுக்கு என்ன நடந்தது?" என்று கேட்டுக்கொண்டே அவனருகில் வந்தார் பத்திரிகை முதலாளி. மரியாதைக்காக எழுந்து ஓரடி எடுத்துவைத்தான் சண்முகம். அவ்வளவுதான். 'தடாலெ'ன்று கீழே விழுந்தான். அறிவு மயங்கிவிட்டது.

சண்முகம் கண் விழித்துப் பார்த்தபோது, ஆசிரியர் மட்டும் அருகிலிருந்தார். தலைக்கு மேலே மின்சார விசிறி வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. பலவித மருந்துக் கலவைகளின் நெடி மூக்கைத் துளைத்தது. வெண்புறுக்களைப், போல் அங்குமிங்கும் ஓடியாடித் திரிந்தனர் சிலபெண்கள். 'முன் பின் பழக்கமில்லாத இந்த இடத்திற்கு நான் எப்படி வந்தேன்?'

"இது யார் வீடு ஸார்? என்னை ஏன் இங்கு கொண்டு வந்தீர்கள்?"

"உஷ்! நீங்கள் அதிகம் பேசக்கூடாது என்பது டாக்டரின் உத்தரவு...இது ஆஸ்பத்திரி, அலுவலகத்தில் இருந்த போது நீங்கள் மயங்கி விழுந்து விட்டீர்கள். உடனே இங்கே கொண்டு வந்து சேர்த்தோம்.'

"இப்போது சில நாட்களாக எனக்கு அடிக்கடி இப்படி மயக்கம் வருகின்றது. அது என்னை ஒன்றும் செய்துவிடாது. நீங்கள் பயப்படாதீர்கள். வாருங்கள் ஸார், போவோம்" என்று சொல்லிக் கொண்டே சண்முகம் எழுந்தான்.

"சண்முகம்! உங்களைக் கஷ்டப்படுத்துகின்றேனென என்னைத்தான் திட்டப் போகின்றார்கள் இந்தத் தாதிகள். மெல்ல மெல்ல இந்த நாட்டின் பொதுச் சொத்தாக ஆகிவருகின்றீர்கள் நீங்கள். இங்குள்ள டாக்டர்கள் சிலரும், தாதிகளும் உங்கள் எழுத்தின் ரஸிகர்கள். உங்களுடன் கதைத்து அமை

தியைக் குழப்புவதற்காக அவர்கள் என்னைச் சும்மா விடமாட்டார்கள். ஆகவே தயவு செய்து படுத்துக்கொள்ளுங்கள். இரண்டொரு தினங்களில் பூரண குணம் அடைந்து விடுவீர்கள்.''

சண்முகத்தை மறுபடியும் படுக்கையில் கிடத்துவது பெரும்பாடாகி விட்டது. ஆசிரியருடைய கெஞ்சுதலுக்காக அவன் மீண்டும் படுத்துக் கொண்டான். அந்தச் சமயம், சண்முகத்தைக் கவனிக்கும் தாதிப் பெண் ஓடிவந்து டாக்டரின் வருகையை அறிவித்தாள்.

டாக்டர் வந்தார். சண்முகத்தைப் பரிசோதித்துப் பார்த்தார்.

"ஏதோ அதிர்ச்சி தரும் செய்தியோ, நிகழ்ச்சியோ இவருடைய இருதயத்தைச் சிறிது தாக்கியிருக்கின்றது. இது ஆரம்பக் கட்டம். இப்பொழுது பயப்பட வேண்டியதில்லை. சேர்ந்தாற் போல் இரண்டு மூன்று வாரங்கட்குப் பூரண ஓய்வு எடுத்தாரானால் இவர் பழைய நிலையை அடைந்துவிடுவார், வியாதியும் பறந்துவிடும்'' என்று ஆசிரியரிடம் கூறினார் டாக்டர்.

"கொழும்பில் இவர் தனியாகத்தான் வாழ்ந்துவருகிறார். ஆகவே இந்த நோய் குணமாகும் வரைக்கும், என் பொறுப்பில் இவரை வைத்துக் கொண்டிருக்கின்றேன். என்னிலும் பார்க்க அதிக அக்கறையுடன் நீங்கள் கவனித்து வருகின்றீர்கள், டாக்டர்! உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்றே தெரியவில்லை, டாக்டர்'' என்று சொல்லித் தன் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தார் ஆசிரியர்.

டாக்டர் சொன்னார் 'என்னை நீங்கள் தவறாக நினைக்கமாட்டீர்கள் என எண்ணுகின்றேன். இவரைத் தனியாக விடுவது தான் நல்லது. நீங்கள் அருகில் இருக்கக்கூடாது. ஏதாவது பேசவேண்டும் என்ற ஆசை இவருக்கு ஏற்படும் பொழுது, நீங்கள் அருகிலிருந்தீர்களானால், இவர் நிச்சயம் பேசியே தீருவார்...ஆகவே...''

டாக்டர் தன் பேச்சை முடிக்கவில்லை. இதுவரை மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த சண்முகம் இப்பொழுது வாய்விட்டுச் சிரித்தான். டாக்டரும் ஆசிரியரும் திரும்பி அவனைப் பார்த்தனர்.

"கடும் வியாதி இருந்தாலும் 'உடம்புக்கு ஒன்றுமேயில்லை, பயப்படக்கூடாது, என்று தெம்பூட்டுவார்கள் மற்றைய டாக்டர்கள் நீங்கள் என்னடா வென்றால் எந்தவியாதியுமே இல்லாத என்னை வீணாகப் பயமுறுத்துகின்றீர்களே!''

டாக்டர் இலேசாகச் சிரித்துக் கொண்டார்.

"நீண்ட நெடுங்காலத்திற்கு எழுத்தாளர் சம்புவின் இலக்கியப் படைப்புகள் இந்த

நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற ஆசையால், இத்தனை கவனமாக உங்களைப் பாதுகாக்க விரும்பினேன். இப்பொழுது உங்களை வெளியே அனுப்புவதில் எனக்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால் என் அக்காவிற்கும் அத்தானிற்கும் நான் பதில் சொல்லியாகவேண்டுமே என்றுதான் பயப்படுகின்றேன்.''

பிரபல பத்திரிகையின் சொந்தக்காரர் கொண்டு வந்து சேர்த்த நோயாளி சண்முகத்தின்மீது டாக்டர் அன்பு செலுத்தவில்லை; எழுத்தாளர் சம்புவின் மீது அளவிற்கு மீறி அக்கறை எழுதுகின்றார். அந்தஎழுத்தாளரின் இலக்கியப் பணியினால் நாடு நலமடையும் என்று மனப்பூர்வமாக நம்புகின்றார். சண்முகத்தின் நெஞ்சு பெருமிதத்தால் உயர்ந்தது.

ஆமாம், யார் இந்த டாக்டர்? எழுத்தாளர் சம்புவைத் தெரிந்து வைத்திருந்த பலருக்குச் சண்முகத்தைத் தெரியாது. சண்முகத்தை நன்கு அறிந்த ஒரு சிலருக்கு மட்டும், அவன் தான் சம்பு என்பது தெரியும். ஆயிரமாயிரம் நோயாளிகளுடன் அனுதினமும் உறவாடி வரும் இந்த கொழும்பு டாக்டருக்கு இந்த இரகசியங்களெல்லாம் எப்படித்தெரிந்தது? என்னைப் பற்றி இவருடைய அக்காவிற்கும் அத்தானிற்கும் என்ன அக்கறை?

ஆச்சரியத்துடன் டாக்டரைப் பார்த்தபடியே இருந்தான் சண்முகம்.

சண்முகத்தின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார் டாக்டர். ''நான் தான் ரூபமதியின் தம்பி மனோகர். அதாவது உங்கள் நண்பர் பரமேஸ்வரனின் மைத்துனர்.''

துள்ளியெழுந்து டாக்டரை அணைத்துக்கொண்டான் சண்முகம். ''நீ தானா ரூபாவின் அருமைத் தம்பி? வைத்தியக் கல்லூரியில் படிப்பதாக முன்பொரு தடவை அக்கா சொன்னாள். இவ்வளவு விரைவில் டாக்டராகிவிட்டாயே! மகிழ்ச்சி மனோகர், மகிழ்ச்சி!''

அந்நியர்கள் என்று கருதியபொழுது அவர்கள் பேசிய மரியாதை பேச்சுகள் அந்நியோன்யமாகி விட்ட இப்பொழுது ஓடிவிட்டன. வைத்தியர்-நோயாளி என்ற வேற்றுமையின்றி அவர்கள் ஒருவரையொருவர் அன்புடன் தழுவிக் கொண்டனர்.

''தம்பி மனோகர்! ஆஸ்பத்திரியிலிருப்பதிலும் பார்க்க, என் அறையில் இருந்தால் நான் நிம்மதியாக இருப்பேன். ஆகவே தயவு செய்து என்னை இங்கிருந்து அனுப்பிவிடு. இந்த நோயை வென்றுவிடுவேன் என்ற மன உறுதி என்னிடம் இருக்கின்றது. ஆனால் உன் சகோதரிக்கு மட்டும் இதைப் பற்றிக் கூறிவிடாதே. திருமண ஆயத்தங்கள் செய்து கொண்

டிருக்கின்ற இந்த நேரத்தில் வீண் கவலை அவர்களுக்கு வேண்டாம். நானே நேரில் வந்து எல்லாவற்றையும் சொல்லிக் கொள்கின்றேன்.''

மனோகர், தனக்கு மேலுள்ள டாக்டர்களைக் கலந்தாலோசித்து, சில நல்ல மருந்துகளையும் கொடுத்து, "வாரத்திற்கு ஒருமுறையாவது இங்கு வரவேண்டும்" என்று சொல்லிச் சண்முகத்தை அனுப்பி வைத்தான்.

டாக்ஸி ஒன்றில் சண்முகமும் ஆசிரியரும் சண்முகத்தின் அறைக்குச் சென்றனர்.

"உங்கள் கதையை நான் மறந்துவிட்டேன். இன்று மாலை அலுவலகத்திலிருந்து ஒரு பையனை அனுப்பிவிடுங்கள். வேறு எந்த வேலையும் பார்க்காமல். இப்பொழுதிருந்தே கதையை எழுதி, மாலையில் பையனிடம் கொடுத்தனுப்புகின்றேன்."

"வேண்டாம், சண்முகம். உங்களை வீணாகச் சிரமப்படுத்தாதீர்கள். டாக்டருக்கு கொடுத்த உறுதியை அதற்குள் மறந்துவிட்டீர்களே! உங்களுக்கு உடல் நலம் இல்லையென்பதை தெரிவித்து, கதையை இரண்டு வாரங்கட்கு நிறுத்திவைக்கலாம். உங்கள் உடம்பைத்தான் முதலில் கவனித்துக் கொள்ள வேண்டும்.''

"என்னால் உங்கள் பத்திரிகைக்கு கெட்ட பெயர் ஏற்படக் கூடாது. என் உடம்பைப் பேணிக் கொண்டே கதையையும் எழுதிவிடுவேன், பயப்படாதீர்கள்.''

''எழுத்திலே போதிக்கும் அன்பையும் அடக்கத்தையும் உதறிவிட்டு, ஏன் இப்படி முரட்டுத்தனமாக நடந்துகொள்கின்றீர்கள் சண்முகம்? உங்கள் கதை இவ்வாரம் பிரசுரமானால், உங்களை எழுதத் தூண்டியது நான்தான் என்று நினைத்து என்னைத் திட்டுவார் முதலாளி. பணம் கொடுக்கும் அந்த முதலாளியே உங்களிடம் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளும்போது நீங்கள் ஏன் சிரமப்படவேண்டும்? எனக்காகவாவது, தயவு செய்து எழுதாமல் இருங்கள்.''

"இப்போது என் மனம் இருக்கின்ற நிலையில், இவ்வாரத்திற்குரிய அத்தியாயத்தை மட்டுமல்ல, கதை முழுவதையுமே நான் எழுதி முடித்துவிடுவேன் போலிருக்கிறது. என் மனத்தினுள்ளே உருண்டு திரண்டு வரும் உணர்ச்சிக் குவியல்களை இப்போதே எழுத்தில் வடித்து விடவேண்டும். ஆசிரியர் ஸார்! பிரசவ வேதனையினால் நான் இப்போது துடிக்கின்றேன். தயவுசெய்து என்னைத் தனிமையில் விட்டு விட்டு நீங்கள் போய்விடுங்கள். எழுதவிடாது என்னைத் தடுத்துவிடுவீர்களானால், அந்தப் பாவம் உங்களைச் சும்மாவிடாது.'

கலைப்பித்துக் கொண்ட கவி

ஞானைப்போல் சண்முகம் உரத்த குரலில் கத்தினன்.

ஆசிரியர் சென்றுவிட்டார். சண்முகத்தின் சிந்தையெல்லாம் கலைத் தெய்வம் புகுந்து உருவேற்றிவிட்டது. எழுத்து என்னும் வாகனத்தில் அந்தக் கலைத் தெய்வத்தை வைத்து, அவன் ஆடினன், பாடினன் சுற்றினன், சுழன்றன்.

பழைய நினைவுகள் பசுமையாகத் தோன்றின. அவற்றைக் கற்பனைக் கலவையில் குழைத்தெடுத்து வெள்ளைக் காகிதத்தில் வடித்து வைத்தான். கதை வளர்ந்தது.

நான்கு ஐந்து தினங்கள் அவன் பத்திரிகை அலுவலகத்திற்குச் செல்லவில்லை. எழுதும் 'மூட்' அந்த நான்கு, ஐந்து தினங்களிலும் அவனிடம் நிரந்தரமாகவே குடிகொண்டு விட்டது.

ஆசிரியருக்குச் சொன்னதைப் போல், மிகுதியாயிருந்த இருபது அத்தியாயங்களையும் அதற்குள் எழுதிவிட்டான். அவன் மனதில் பெரிய நிம்மதி. பெரியதொரு கோட்டையைக் கைப்பற்றிவிட்டோமே என்ற வெற்றிப் பெருமிதம். கம்பனியின் காவியத்தைப் போல், செகப்பிரியரின் நாடகங்களைப்போல் உலகம் முழுவதும் பரவி, எத்தனையோ நூற்றுண்டுகள் உயிர் வாழாவிட்டாலும், தான் உயிருடன் இருக்கும்வரைக்குமாவதுதமிழ்நாட்டு வாசகர்களால் போற்றப்படக்கூடிய தாக ஒரு ஆக்க வேலையை, இலக்கியப் பணியைச் செய்துவிட்டதால் ஏற்பட்ட மன நிறைவு.

கதை முழுவதையும் முடித்த பின் அலுவலகத்திற்குச் சென்றன். அங்குள்ளோரைப் பார்ப்பதற்கே வெட்கமாக இருந்தது. யார் கண்ணிலும் படாமல், மெதுவாகச் சென்று தனக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தான்.

காலைப் பத்திரிகை வந்தது. திருமண நினைவும் வந்தது. பழைய பத்திரிகையைத் தேடி எடுத்து, அந்த அறிவித்தலை மீண்டும் படித்தான். அன்றுதான் திருமணம்!

இதுவரை அவனுக்குத் தனியான அழைப்புக் கிடைக்கவில்லை. அதற்காக, உயிருக்குயிரான நண்பனின் திருமணத்திற்குச் செல்லாமல் விடுவதா? அவனுடைய அந்தரங்கங்கள் அனைத்தையும் அறிந்தவன் பரமேஸ்வரன். சிறு வயது முதல் சேர்ந்து படித்தவர்கள். நண்பர்கள் என்றல் 'சண்முகமும்—பரமேஸ்வரனும் போல' என்று ஆசிரியர்களும், ஊரவர்களும் சொல்லுமளவிற்கு நெருங்கிப் பழகியவர்கள். அப்படிப் பட்ட ஒரு நல்ல நண்பனின் வாழ்க்கையிலே, ஒரே ஒருதடவை மட்டும் நிகழக்கூடிய ஒரு நல்ல நிகழ்ச்சி இன்று நடைபெறப் போகின்றது. தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கவில்லை என்பதற்காக, அங்கு செல்லாமல் விடுவது எவ்வளவு சிறுமை?

'சாவித்திரி என்ற அந்தச் சதிகாரி வந்தாலும் வரட்டும். என் மனத்தைச் சபலமடையச் செய்ய அவளால் முடியாது. நான் போகத்தான் போகிறேன். நண்பனின் திருமண வைபவத்தில் கலந்து கொண்டு நண்பனைக் கௌரவிக்கப் போகின்றேன்!

திருமண விழா கோலாகலமாகத்தான் இருந்தது. சில தினங்களுக்கு முன்னுல் அவன் கற்பனையில் கண்ட கல்யாணக் காட்சியை அப்படியே அங்கு கண்டான். சாவித்திரி மட்டும் அங்கு வரவில்லை. சண்முகத்திற்கு நிம்மதியாயிருந்தது.

பல வசதிகளை முன்னிட்டு, கொழும்பிலேதான் கல்யாண ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். பரமேஸ்வரனின் அலுவலக நண்பர்கள், ரூபமதியின் சிநேகிதிகள், கொழும்பு

நகரப் பிரமுகர்கள், ஆகியவர்களு டன், பரமேஸ்வரனின் ஊரிலிருந்து ஏராளமான நண்பர்கள் உறவினர் களும் கல்யாணத்திற்கு வந்திருந் தனர். அத்தனை கூட்டம் வந்தது கொழும்பில்அதுவே முதல் தடவை என்று பேசிக் கொண்டனர் சிலர்.

சமயச் சடங்குகள் எல்லாம் முடிந்ததன் பின், பரமேஸ்வர னின் நண்பர்கள் பலர் தம் வாழ்த் துக்களைத் தெரிவித்து, விலையுயர்ந்த பல பரிசுப்பொருட்களை மணமக் களுக்கு அளித்தனர். சண்முகத்தின் முறை வந்தது.

''இல் வாழ்க்கை என்பது ஒரு கற்கண்டு மலை. அதை எந்தப்பக் தால் கடித்தாலும் இனிக்கும். அந்த அருமையான இல்வாழ்க்கையில் இன் பப் பூரிப்புடன் அடியெடுத்து வைக் கின்றார்கள் இந்தத் தம்பதிகள். மாசற்ற அன்பினால் மனங்கலந்த இந்த இலட்சியவாதிகள் இருவரும் காதலிற்கோர் எடுத்துக்காட்டாய், வாழ்விற்கோர் வழிகாட்டியாய்த் திகழ வேண்டும் என்று விரும்பி, திகழ் வார்கள் என்று நம்பி இச்சிறிய பரிசை அளிக்கின்றேன்" என்று சொல்லி ஆறு 'அகிலனை'யும் மூன்று 'மு. வ.''வையும் இரண்டு 'இராஜாஜி'யையும் பரிசாகக் கொடுத் தான் சணமுகம்.

எல்லோரும் பேசி முடிந்ததும் நன்றி தெரிவிப்பதற்காக எழுந் தான் பரமேஸ்வரன். ஆசிச் செய்தி கூறி அன்பளிப்புச்செய்த அனை வர்க்கும் அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துவிட்டு, ''பிரபல எழுத் தாளர் சம்பு அவர்கள் எமது திரு மண விழாவில் கலந்து கொண்டு, தன் கற்கண்டுக் குரலில் பேசி அமர இலக்கியங்கள் சிலவற்றையும் பரி சாகக் கொடுத்துள்ளார்கள். சம்பு அவர்கள் எமது இத் திருமணத்தில் கலந்துகொள்வார்கள் என்ற செய்தி பரவினபடியாற்றான், இவ்வளவு தொகையாக நீங்கள் இங்கே திரண் டிருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே உங்கள்சார்பிலும்,

## பாலர் பாடல்.

—சஞ்சீவி—

தோழர்களே வாருங்கள்
சோலை பார்க்கச் செல்லுவோம்
வாழை பலா மாம்பழம்
வாரி எடுத் துண்ணுவோம்.

உயரமான மலை வழியே
ஊற்றருவி ஓடுதே
அயர்வு தீர்க்கும் தென்றற் காற்று
அமைதியாக வீசுதே.

கோலமயில் ஆடவே
குயிலினங்கள் பாடவே
பாலர்களும் கூடவே
பாடித்தாளம் போடுவோம்.

வானரங்கள் கொப்புகளில்
மாறி மாறித் தாவுதே
மானினங்கள் துள்ளித் துள்ளி
மகிழ்ச்சியோடு மேயுதே.

தாமரைத்த டாகத்தில்
தவளை தத்திப் பாயுதே
பூமரத்துக் கிளையெல்லாம்
பூக்களோடு சாயுதே..

எம் இருவர் சார்பிலும் எம் நன்றியை இந்த எழுத்தின் வேந்தனுக்குத் தெரிவிப்பதுடன், அவர் மனதில் இருத்தியுள்ள இலட்சியப் பெண்ணை மனைவியாக அடையும் காலம் மிக விரைவாக வரட்டும் என்றும் வாழ்த்துகின்றேன்." என்று சண்முகத்தையும் வாழ்த்தினுன்.

இதுவரை அமைதியாக இருந்த விருந்தினர் அனைவரும் பலத்த கர கோஷம் செய்து தம் மகிழ்ச்சியை வெளிக்காட்டினர். கண்களில் அரும்பிய நீரை, மற்றெவரும் கவனியாதபடி தன் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டான் சண்முகம்.

கல்யாணச் சந்தடி ஒரு வழியாக அடங்கியது. விடைபெற்றுக் கொண்டு செல்வதற்காகப் பரமேஸ்வரனிடம் சென்ருன் சண்முகம்.

"நீண்ட நாட்களுக்குப் பிறகு இங்கு வந்திருக்கின்ருய். ஏன் அவசரப்படுகின்ருய்? இரண்டு மூன்று நாட்கள் தங்கிவிட்டுப் போகலாமே?"

"எனக்கு இப்பொழுது அவசர வேலையொன்று இருக்கின்றது. போய் விட்டு ஆறுதலாக வருகின்றேன். இங்குள்ள மற்றைய விருந்தினர்களை நீ கவனி."

"அது சரி, ஏன் சாவித்திரியை நீங்கள் கூட்டிக்கொண்டு வரவில்லை? உங்களுக்கு அனுப்பிய அழைப்பிதழில் அதை விசேடமாகக் குறிப்பிட்டிருந்தேனே? அவள் வருவதற்குச் சம்மதிக்கவில்லையா?" ரூபமதி கேட்டாள்.

"சாவித்திரி உங்கள் சினேகிதி. அவளைப் பற்றி உங்களுக்குத்தானே தெரியும். என்னை ஏன் கேட்கின்றீர்கள்?"

"சற்று முன் எங்கள் இருவரையும் வாய்நிறைய வாழ்த்திய நீயா இப்பொழுது இப்படிப் பட்டும் படாதது மாகப் பேசுகின்ருய்? போகட்டும். உன் திருமணம் எப்போதப்பா? எங்களை அழைப்பாய்தானே ?" சண்முகத்தின் புதியபோக்கு, பரமேஸ்வரனை இப்படிக் கேட்கத் தூண்டியது.

யும் என் திருமணத்திற்கு அழைப்பேன். திருமணத்திற்கு ஒருவாரம் முன்னதாகவே நீங்களிருவரும் வந்துவிடவேண்டும். நீங்கள் வராவிட்டால் பார்வதி உங்களைச் சும்மாவிடமாட்டாள்."

'யார்? பார்வதியா?" ஆச்சரியமும் அதிர்ச்சியும் குழியிட ஒரே நேரத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டனர்.

"ஆமாம்! இப்போதிருக்கும்நிலையில் நான் பார்வதியைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன் போலிருக்கின்றது. விபரம் எல்லாவற்றையும் பின்பு சொல்கின்றேன்" என்று விட்டு வெளியேறினுன் சண்முகம்.

இதயம் வலித்தது. அறைக்குச் செல்வதற்கு முன், ஆஸ்பத்திரிக்கு ஒருதடவை செல்ல விரும்பினுன். பஸ், ஆஸ்பத்திரி வாசலில் அவனை இறக்கிவிட்டுச் சென்றது.

டாக்டர் மனேகரனின் அறைக்கு நேரே சென்ருன். எங்கோ செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார் மனேகர்.

"உங்கள் பாரதி கல்லூரியில் படிப்பிக்கும் ஆசிரியை ஒருத்திக்குக் கடும் இருதய நோய் கண்டிருக்கின்றதாம். இரண்டு டாக்டர்களை அனுப்பும்படி மட்டக்களப்பிலிருந்து இன்று தந்தி வந்திருக்கின்றது. நானும் இன்னெருவரும் அங்கு போகின்ருேம். நான் திரும்பி வரும் வரைக்கும் டாக்டர் விஜயசேகரா உங்களைக் கவனிப்பார்" என்று சொல்லிக் கொண்டே அவசர அவசரமாகச் சென்றுவிட்டார் டாக்டர்.

சண்முகம் திகைத்துப் போய் நின்ருன்.

'பாரதி கல்லூரியின் ஆசிரியை யாராயிருக்கும்?"

நெடுகிலுமே அதைப் பற்றிச் சிந்தித்தால் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது.

விஜயசேகராவைப் பார்க விரும்பாது, தன் இருப்பிட்த்திற்குச் செல்வதற்காகப் பஸ்ஸில் ஏறினுன் சண்முகம்.

# வாசகப் பெருமக்களே!

துர்ப்பாக்கியம் என்ற பொருளில் ஏதாவது வார்த்தைகள் தமிழ் மொழியில் உண்டா? ஆம், சிவஞானம் என்னும் ஒரு வார்த்தை இருக்கிறது.

அவனுடைய மனம் பாறையாகவே இருந்தது.........

அதைத் தன் அன்புப் பார்வையால் நெகிழ வைத்த—விழி உழியால் அசைய வைத்த சரசு, அப்பாறையைக் குடைந்து கோவில் செய்து குடி போகிறேன் என்றாள்.

நஞ்சு நினைவோடு அவளை நிழல் போலத் தொடர்ந்த காலதேவனோ, கோயிலாவது குளமாவது அடித்து நொருக்கித் தரைமட்டமாக்கி விடுகிறேன் என்றான்

❀

இவற்றில்—
நடந்தது ஒன்று
நடவாதது ஒன்று
இவற்றில்—
நிகழ்ந்தது எது?
நிகழாதது எது?

❀

## விரைவில் "கலைச்செல்வி"யில் ஆரம்பமாகவிருக்கும்

# "மனப்பாறை"

## என்ற தொடர்கதையில் இவற்றின் விடையை அறிந்துகொள்ளுங்கள்

## எழுதுபவர்—?

# நகைச் சுவைக் கட்டுரைப் போட்டி

**1-ம் பரிசு ரூபா 30. 2-ம் பரிசு ரூபா 20.**

1. இலங்கையில் நகைச்சுவை எழுத்தாளர்கள் குறைவு. ஆகவே இத் துறையில் பல எழுத்தாளர்களை ஈடுபடச் செய்வதற்காகவும் சிறுகதை, கவிதை முதலியவற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் போல் இப் புதிய துறையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு அடிகோலுவதற்காகவும் நடாத்தப்படும் இப் போட்டியில் ஈழத்து எழுத்தாளர்களும் எழுத்தார்வ முடையவர்களும் உற்சாகமுடன் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

2. கட்டுரைகள், "கலைச்செல்வி" அளவில் நான்கு பக்கங்கட்குக் குறையாமலும் ஏழு பக்கங்கட்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

3. எழுத்தாளருடைய சொந்தக் கற்பனைத் திறனைக் கொண்டே கட்டுரைகள் எழுதப்பட வேண்டும். திருட்டு எழுத்தும், தழுவல்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. எழுத்தாளர்கள் தங்கள் பெயரைத் தனியாக ஒரு தாளில் குறித்தனுப்ப வேண்டும்.

4. எந்த ஒரு மதத்தினரையோ, இனத்தினரையோ, சாதியினரையோ, மொழியினரையோ கட்டுரையாளர் வெளிப்படையாக அவர்கள் மனம் புண்படும்படி கண்டிக்கக் கூடாது.

5. கீழ்க்கண்ட தலைப்புகளில் ஒன்றையோ, அல்லது இவை போன்ற வேறு தலைப்பையோ தெரிவு செய்து, கட்டுரை எழுதலாம்: (1) நான் ஒரு அபேட்சகர். (2) பந்தம் பிடித்தல். (3) ரயில் பிரயாணம். (4) என் மாஜி காதலிக்கு! (5) தலைமை தாங்குதல் (6) காக்கை விடு தூது. (7) நான் ஒரு பஸ் சாரதி, (8) அகில இலங்கைப் பாதசாரிகள் சங்கம்.

6. கீழ்க்கண்டோர் நீதிபதிகளாகக் கடமையாற்றுவர்.
   1. திருவாளர். குயுக்தியார்.
   2. திரு. தேவன்- யாழ்ப்பாணம்.
   3. ஆசிரியர், கலைச் செல்வி.

7. கட்டுரைகள் கிடைக்க வேண்டிய கடைசித்திகதி: 20-8-1960.

8, அனுப்ப வேண்டிய முகவரி:

நகைச் சுவைக் கட்டுரைப் போட்டி,
"கலைச் செல்வி"
கந்தரோடை: :சுன்னாகம்.

இன்பம் தரும் இனிய உணவு வகைகட்கு

## இன்ப நிலையம்

சுவை நிறைந்த
விலை குறைந்த
சிற்றுண்டிகட்கு,

## இன்ப நிலையம்

நறுமணம் மிகுந்த காப்பி,
தேநீர் பானங்கட்கு,

# இன்ப நிலையம்

உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி.

கல்யாண வைபவங்கட்கும் மற்றும் விசேடவிழாக்களுக்கும் ஓடர் பலகாரங்கள் செய்து கொடுக்கப்படும்

இன்ப நிலையம்
ஸ்டேசன் வீதி, : : சுன்னாகம்.

சகல விதமான கட்டிடத்துக்கு ய
உத்தரவாதம் பெற்ற பொருட்கள்
குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்
ஒருமுறை பரீட்சிக்கவும்

# என். வைத்திலிங்கம் அண்ட் கொம்பனி லிமிரெட்

கொழும்பு
38, மூன்றாம் குறுக்குத்தெரு,
ரெலிபோன், 2029.

யாழ்ப்பாணம்
ரெலிபோன்,
530.

# SENATHIRAJAH JEWEL HOUSE

Honesty and Promptness are our motto

Specialists in fashicnable jewelleries.

PROMPT ORDERS.

Guaranteed Service.

உங்கள் நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்
தற்காலத்திற் கேற்ற புதுமாதிரியான

நகைகளுக்கும்

சிறந்தஇடம்

## சேனுதிராசா நகை மாளிகை

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்

## சேனுதிராசா

# நகை மாளிகை

உரிமையாளர் ;- கந்தையா சேனுதிராசா.

நகை வியாபாரமும் தொழிற்சாலையும்

“ஸ்ரீவாசம்”, 20, பொற் தொழிலாளர் லேன்,

கொக்குவில் - கிழக்கு.

# உங்கள்
# பிற்காலத்தைப் பற்றிச் சிந்தித்தீர்களா ?.

வாழ்க்கை எப்பொழுதுமே இன்பகரமாயிராது. இப்போதைய குறைந்த வருவாயில் நீங்கள் செட்டாகச் செலவழித்து, மகிழ்ச்சியோடு உங்கள் காலத்தைக் கடத்தினாலும், உங்கள் உயிருக்குயிரானவர்களிடமிருந்து, விதி, திடீரெனச் சதிசெய்து, உங்களைப் பிரித்து விடலாம். அப்பொழுது உங்களை நம்பியிருப்பவர்களை யார் காப்பாற்றுவார்கள் ?. அவசியமான செலவுகளுக்கு அவர்கள் யாரிடமிருந்து பணம் பெறுவது ?.

## எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்.

அவரவர் வருமானத்துக்கு ஏற்ற வகையில் சேமித்துப், பிற்கால நெருக்கடியைத் தவிர்ப்பதற்கேற்ற வழிகாட்டி, உதவத் தயாராய் இருக்கிறோம்.

**நடைமுறையில் உள்ள திட்டங்கள்:-**

விவாக, அந்தியகால சேமலாப நிதிகள், ஆயுள், கல்வி, விவாக ஆதாரநிதி, மோட்டோர் இன்சூரன்சுகள், குறித்தகாலச் சேமிப்புத் திட்டங்கள்.

## சேர்ந்தோர்க்குச் சேர்ந்துள்ள திட்டத்துக்குத் தக்கதாக விசேட கடன் வசதி செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

# இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்.

280 இரண்டாம்மாடி, இராசா கட்டடம்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி :-526.

தந்தி:- "இனிக்கோ"

"போட்டோகலை" உலகில்

ஓர் அற்புதம்

என்றும் மறக்கமுடியாத வைபவங்களில்,

உங்கள் உருவங்களை

இயற்கை வர்ணங்களில்

உருவாக்கித்தருகிறோம்

வடமாகாணத்தில்

சுன்னுகம் பிறின்ஸ் ஸ்தாபனத்தாரால்

மட்டுமே இந்தக்கலை உருவாக்கப்படுகிறது

**Kodak - Extachrome**

கொடாக்-எக்ராகுரோம்


டெக்னிக் கலர் !!!

நினைவிருக்கட்டும்

சுன்னுகம் பிறின்ஸ்

யாழ்—தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, சுன்னுகம், கலாதேவி அச்

Registered at the G. P. O. as a Newspaper.



Sellams